
# தூண்டி

திங்களோர் இதழ்

பொது சன நூலகம்
- 4 MAR 1997
யாழ்ப்பாணம்



துலங்குபவை,

★ ஏன் இந்தத்தூண்டல்.
★ கல்விப் பிரச்சினைகள்.
★ சீனத்து நினைவுகள்.
★ வகுப்பறையில்..........
★ சிறுகதைகள்.
★ கவிதைகள்.
★ சைவத்திருமுறைகள்.
★ ஈழத்துக் கவிதைகளில்........
★ பக்தி இலக்கியம்.
★ உளவியல்.
★ விலங்கியல.
★ அறிவியல்ச் சிதறல்கள்.

தை 1997 தூண்டி 1 விலை: ரூபா 15/-

★ சமூக — கலை — இலக்கிய — அறிவியல் ஏடு ★

ஆசிரியர் :-
தி. செல்வமனோகரன்.

※ ※

இணையாசிரியர் :-
தாவை. லோ. துஷிகரன்.

※ ※

துணையாசிரியர் :-
சோ. ரவீந்திரன்.

※ ※

காரியாலய முகவரி :-
**'தூண்டி'**
கேணியடி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

"தூயவை துணிந்துவிட்டால்
பழிவந்து சேர்வதில்லை"



**ஊக்கிகள் ........**

★ கலாநிதி. நா சுப்பிரமணியன்
★ திரு. S. சிவலிங்கராஜா M.A
★ திரு. அ. பஞ்சலிங்கம் Bsc. Dip.in.Ed. IDEPA (New Delhi)
★ திரு. ஐ. கமலநாதன் B.A. (Hons)
★ திருமதி S. அருள்நங்கை B.A. (Hons)
★ கலாநிதி. சபா. ஜெயராசா
★ திரு. து. வைத்திலிங்கம் (மேலதிக அரசாங்க அதிபர்) யாழ்ப்பாணம்.
★ திரு. சு. இரத்தினராசா B. A. Dip- in- Ed.
★ திரு. ஆ. இராஜகோபால் B A(Hons) Dip. in. Ed (செம்பியன் செல்வன்)
★ கவிஞர். சோ. பத்மநாதன் B.A. Dip .in. Ed
★ திரு M. S. ஸ்ரீதயாளன் B.A. Dip.in Ed.
★ திருமதி. கோகிலா மகேந்திரன் SLPS
★ திரு. ந. விஜயசுந்தரம் B.A (Hons)
★ திரு. பொன் அருந்தவநாதன் B.A (Hons)

---



**வாசகர்களே,**

உங்கள் ஐயங்கள் யாவற்றையும் எமக்கு எழுதி அனுப்புங்கள்.
பதில்களை அடுத்த தூண்டியின், 'தாணில்' பகுதியில் அறிந்து கொள்ளுங்கள்

இது ஓர் கேள்வி - பதில் பகுதி



# தூண்டியின் தூண்டலேன்?

**தூண்டி** இது இளைய இதயத்தின் இதயத் துடிப்பு-தமிழ்க் கன்னியின் வனப்பில் ஏற்பட்ட மயக்கம். மயக்கத்தின் துலங்கலாய் ஏற்பட்ட தெளிவு சமூகத்தின் தேவையை பூர்த்தி செய்ய எடுத்துக் கொண்ட முயற்சி. கலை இலக்கியமும் அதனூடாக சமுகம் வளர்ப்பதற்காய் விதைக்கப்பட்ட கடுகுமனவேள்வியில் கிடைத்த வரம். திகைக்கும் இதயங்களின் நாடிபிடித்து ஆறுதலாய் சில வார்த்தை, தமிழின் வளர்ச்சிக்கு ஒரு தோள்கொடுப்பு, இதுவொரு மனிதப்பார்வை. மனங்களின் இனிய தென்றல். இளந்தலைமுறைக்கு அதன் எழுத்து வளர்ச்சிக்கு ஒரு தூண்டல். காதலர்களின் இதய பாஷை. துப்பாக்கி உலகில் ஒரு பேனா யுத்தம். இரத்தம் சிந்தும் மண்ணில் மைசிந்தும் எண்ணம். விட்ட இடத்தின் தொடக்கம்.. வார்த்தை ஜாலங்களை விடுத்து சமுகத்தின் சீர்கேட்டை துடைக்கும் திண்ணம், மாயாஜாலங்களின் முடக்கருத்துக்களின் இருப்பிடங்களுக்கு ஒரு சவால். பாமரத்தனத்திற்கு முடிவு. அறிவியலிற்கு விடிவு. பின்நோக்கிச் செல்லும் சமுதாயத்தை முன்னோக்கி இழுக்கும் விருப்பத்தின் படிக்கல், மனிதனை நிறை மனிதனாக்கும் முயற்சி, மக்களின் அறிவிற்கு ஒரு தூண்டல். காத்திரமான படைப்பிற்கும் களம், பாலைவனத்தில் ஒரு மரமாய் இருக்கும் ஆசை. தொடுவானத்தை இரசித்து ஆராயும் முயற்சி. காதலியை தொடத் துடிக்கும் ஆடவனின் மனக் குறுகுறுப்பு. தமிழ்வானின் இலட்சக்கணக்கான தாரகைகளில் ஒன்று. துகிலுரியும் துச்சாதனுக்கு விழும் சவுக்கடி காற்சட்டைப் பையனும் முதிய இளைஞரும் வியக்கும் வார்த்தைகள். நிமிர்ந்த பார்வை நேர்கொண்ட நடை. யாரிற்கும் அஞ்சாநெறி. இது மொட்டின் முகிழ்ப்பு. பெண்ணின் பூப்பு; மலர்ச்சி. பாரதியின் பதினொரு வயதுப் பெரிய எண்ணம்.

யாழ் இசையுடன் இணைந்தது யாழ்ப்பாணம். ஆயினும் இங்கே இனிமையில்லை. அமைதியில்லை, மக்கள், வெட்டும் வாழை மரங்க்ள். இவர்கள் பாலைவன ரோஜாக்கள். அம்மலர்களின் மணமாய்த் தூண்டி.

புதிதொரு சஞ்சிகை. இளையவர்களின் சின்ன மனத்தின் பெரிய எண்ணங்கள் விற்பனையுறுமா? இதற்குப் பதில் உங்களிடம் தான். தூண்டி துலங்கலுக்கு நீங்களே தூண்டல். ஆதரவுதரின் நல்லமுது உம்கையில். அபிமன்யுவின் வியூக உடைப்பு. வெற்றியுடன் மீள்வதும் அன்றி இறப்பதும் உம் கைகளில்தான். திண்ணமாய் சொல்கின்றோம் உங்களின் ஆதரவில் தூண்டி வளரும். விருட்சமாகி விழுது விடும். நிழல் தரும். நம்பலாம்.

— ஆசிரியர்

## துலக்குங்களேன் □ □ □

அட்டைப் படத்தைப் பாருங்கள். அதிலே துலங்கும் காட்சி உங்கள் அகங்களிலே எதைத் தூண்டுகிறது. மனத் திரையில் இழையோடும் அந்தக் கருத்துக்களை அழகாக உங்கள் எழுத்துக்களால் துலக்குங்கள். மாணவர்களே சிந்தியுங்கள் உங்கள் சிந்தனையை தூண்டி உங்களைத் தூண்டிவரும். இந்தத் தூண்டி இதழிற்கு அந்த விளக்கக்கருத்தை 20. 2. 1997 க்கு முன்பதாக எழுதி அனுப்பி வையுங்கள். சிறந்த சிந்தனைக்கருத்திற்கு பரிசில் காத்திருக்கின்றது.

★ அட்டைப்படம் - லோ. துஷி ★

## சந்தர்ப்பம் ● ● ●

இளம் வாசகர் உள்ளங்களுக்கு. தங்களது எழுத்தாற்றலை வளர்க்சு வேண்டுமா இதோ ஒரு சந்தர்ப்பம். உங்களது ஆக்கங்களை கதை, கவிதை, கட்டுரை போன்ற வடிவங்களில் எமக்கு அனுப்பி வையுங்கள். மற்றும் பொது அறிவு விடயங்கள், நகைச்சுவைத் துணுக்குகள் புதிய செய்திகள் போன்ற பல்சுவை அம்சங்களையும் அனுப்பலாம், தொகுப்புக்களாயின் அவற்றை எங்கிருந்து பெற்றீர்கள் என்பதையும் எழுதத்தவறாதீர்கள். அத்துடன் உள்ளே உள்ள ''வாசகர் தூண்டல்'' படிவத்தையும் நிரப்பி, இணைத்து அனுப்புங்கள். தகுதியானவை எமது தூண்டி இதழில் வெளியாகும்.

# தற்கால மாணவர் உலகம் எதிர்கொள்ளும் கல்விப் பிரச்சினைகள் பற்றிய ஒரு கண்ணோட்டம்

பாடசாலை மாணவர் தூண்டி என்னும் சஞ்சிகை ஒன்றை இக்காலத்தில் வெளியிட்டு சமூகத்தில் கல்விப் பிரச்சனைகள் பற்றிய விடயங்களில் தங்களின் கண்ணோட்டத்தை செயற்பட விட்டது சாலச் சிறந்தது. கல்வி ஒரு பாரம்பரிய விலை மதிக்க முடியாத ஒரு கருதுகோளாகும். இது யாவரும் அறிந்த ஒரு உண்மை. கற்றுத் தேர்ந்தவர், கற்க ஆசைப்படுவார்கள், கற்க விருப்பமே அற்றவர்கள், கல்வியில் கரிசனை அற்றவர்கள் என்று சமுதாயத்தில் உள்ளவர்கள் இன்றும் உள்ளனர். காலம் இராண்டாயிரம் ஆண்டைக் கடந்து இருபத்தோராம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைக்கப்போகின்றது. இச் சந்தர்ப்பத்தில் உலக நாடுகளின் அரசியல் பொருளாதார தொழில்நுட்ப ஆற்றல்கள் மனித சமுதாயம் வியக்கத் தக்க அளவிற்கு மாற்றங்களைக் கொண்டு நிற்கின்றது. இதற்கு முகங்கொடுக்கக்கூடிய மாணவர்களை பாடசாலை மட்டத்தில் உருவாக்கச் செய்ய வேண்டியது சமகால பெற்றோரினதும், ஆசிரியர்களின்தும், கல்வி அலுவலர்களினதும் முன்னணிக் கடமையாக சிந்திக்கச் செய்ய வேண்டி இருக்கின்றது. இந்நிலையில் தூண்டி என்னும் இந்தச் சஞ்சிகை வெளியிடப்படுவது மேற்கூறிய பொறுப்பான கடமைகளுக்கு ஊன்றுகோலாக அமையும் என்பது பொருத்தமானதும். மதிக்கத்தக்கதுமான ஒரு முன்னோக்கு நடவடிக்கையாகும்.

கல்வியில் குறிக்கோள்கள், இலக்குகள் மனிதனை ஒரு நடுநிலையாளனாக உருவாக்குவதாகும் என கல்வித் தத்துவ மேதைகள் கூறியுள்ளனர். காலத்துக்குக் காலம் சமுதாய மாற்றங்கள் தனது பொருளாதார அலகுகளில் மாற்றங்களை ஏற்படுத்தி வரும்போதும் மனித சமூகம் ஒரு நடுநிலைச் சமூகமாக அமைய வேண்டியுள்ளது. சமுதாயம் இதனை நிலைநாட்ட வேண்டுமானால் நடுநிற்கும் நெஞ்சங்களை கல்வித்துறை மூலம் உருவாக்கவேண்டும். ஆனால் தற்கால பாடசாலைகளையும், ஆசிரியர்களையும் கருத்திற் கொள்ளும் போது ஊதியத்திற்காக ஒன்றுகூடும் ஆசிரியர் களமாகவும், பரீட்சையில் சித்தியடைய மாணவர்கள் ஒன்றுகூடும் களமாகவும் பாடசாலைகள் விளங்குகின்றன. கல்வி புதியனவற்றைக் காணவேண்டும். புதியனவற்றை பயன்படுத்த கற்றுக்கொடுக்க வேண்டும். அதன்மூலம் புதியதோர் சமுதாயம் உருவாகி சமூகத்தில் பண்பாடு பாரம்பரியங்கள் பேணப்பட வேண்டும். இந்த நிலையில் இன்றைய கல்விமுறை அமையவில்லை. இன்றைய சமுதாய அமைப்பை கல்வியியலாளர்களோ, பீடாதிபதிகளோ, அரசியல் அறிஞர்களோ, திட்ட வல்லுநர்களோ உருவாக்கவில்லை. தானாகவே அமைந்த ஒரு சமுதாய அமைப்பை கலைத் திட்டமாக்கி பாடசாலைகளில் வகுப்பறை மட்டத்தில் அமுற்படுத்த வேண்டியுள்ளது. இதனால் புதிய பாதையை காட்டிச் செல்ல வேண்டிய கல்விப் பாரம்பரியம் பழையவற்றை (சமுதாயத்துக்கு ஒவ்வாதவை) பாடசாலைகள் மூலம் நிலைநிறுத்த வேண்டியுள்ளது. எனவே சமுதாயக் குற்றங்ளையும், ஒவ்வாதனவற்றையும் பேணிக்காக்கும் கல்விக் கொள்கையாக அமைந்துள்ளது.

உதாரணம் ஒரு தொழிற்சாலையின் உள்ளீடாக போகும் மூலவளங்கள் வெளியே வரும்போது சமுதாயத்திற்கு உதவும், பயன்படுத்தும் பொருட்களாக வெளிவருகின்றன. அதேபோன்று சமுதாயத்திலிருந்து பாடசாலைக்குள் வரும் மாணவர்கள் பாடசாலையை விட்டு வெளியேறும்போது ஒரு பூரண மனிதனாக வரக்கூடிய முறையில் வெளியேறாமல் இருப்பதே இன்றைய சமுதாயத்தினை வலியுறுத்தி நிற்கும் முன்னணிப் பிரச்சினையாகும். குறிப்பாகக் கூறுவதானால் அறியாமை, வறுமை, இன உணர்வு, சாதிக் கட்டுப்பாடுகள், சமுதாய பாரம்பரிய வரைமுறைகள் இன்றைய இளைஞர்களுக்கு ஒவ்வாதனவாகவும் கல்வி முறைக்கு ஒவ்வாதவையாகவும் ஏற்றுக்கொண்டாலும் அறியாமை என்ற இருள் கல்வி மூலம் அகற்றப்படாததால் அவை மீண்டும்மீண்டும் நிலைநிறுத்தப்படுகின்றன. எனவேதான் கல்வி உலகில் கலந்துள்ள மாணவர்களுக்கு சமுதாயம் அசிங்கமாகவும் ஏற்றுக்கொள்ளாதவற்றை பாதுகாப்பானவாகவும் இருப்பதை அடியோடு

சு. இரத்தினராசா
(பிரதிக் கல்விப்பணிப்பாளர்
உடுவில் கோட்டம்)

வெறுக்கின்றனர். மனித பூமியில் வாழப்பிறந்தவன் வழிகாட்டப் பிறந்தவன் புதியனவற்றைக் கண்டு வருங்கால சந்ததியாருக்கு உதவப் பிறந்தவன். இன்று தனக்கே எல்லாம் சொந்தமாக இருக்கவேண்டும் என்றும் தாழ்வு மனப்பான்மையில் சிக்குண்டு தவிக்கின்றான். இத்தன்மை போன்ற பிரச்சனைகளை அகற்றுவதற்கு தூண்டி என்ற இந்தச்சஞ்சிகை வழிவகுத்து கொடுக்கும் என்பது நம்பிக்கையாகும்.

சமகால சமுதாயத்தில் எத்தனையோ நூல்கள் கற்பதற்கு உள்ளன. காலம் காலமாக தோன்றிய எழுத்தாளர்கள், நூல் வல்லுநர்கள் சமுதாய சீராக்கத்தை உருவாக்க வேண்டும் என்ற வேணவாவில் எழுதியிருக்கின்றார்கள். ஆனால் அவைகளில் எத்தனை நூல்கள் இன்றைய இளைஞர்களால் வாசிக்கப்படுகின்றன என்பது சிந்தனைக்குரிய விடையமாகும்.

"கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க
அதற்குத் தக"

என்பது முதுமொழி. அதற்கேற்ப கற்பவர்களும் இல்லை. கற்பிப்பவர்களும் இல்லை. கல்வி நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு இக்குறள் தகுந்த கருதுகோளாகும். ஆனால் இதை உணர்வாரும் இல்லை. உணர்ந்து அதன்படி செயற்படச்சொன்னாலும் சமுதாயத்திற் காணப்படும் அறியாமை, வறுமை இவர்களைத் தூரநிற்குச் செய்கின்றது. இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் கட்டம் இதுவாக இருந்தபோதும் கல்விப் பாரம்பரியத்தை கருத்திற் கொண்டு செயற்படுவார் இல்லை. இதனால் பாடசாலைகளுக்கும் கற்பிக்கும் ஆசிரியர்களும் கல்வியின் இலக்குகளை நோக்கி மாணவர்களை வழிநடத்த முடியாமல் அங்கலாய்க்கின்றனர். கற்கும் கல்வி கற்பித்தற் திறமையிலும் கற்றல் திறமையிலும் தங்கிநிற்கின்றது. இது தனியே ஆசிரியர்களாலும் கல்வி அலுவலர்களாலும் ஏற்படுத்தக்கூடியதொன்றல்ல. இதற்கு ஆசிரியர் மாணவர்கள், பெற்றோர்கள், கல்வி அலுவலர்கள், போன்றோரது ஒருங்கிணைந்த நடவடிக்கை தேவை. கற்கும் மாணவர்கள் தங்கள் சமுதாய பொறுப்புக்களை உணர வேண்டும். இந்த உணர்வை ஏற்படுத்தும் போது சமுதாய வரம்புகளானது சிந்தனை ஓட்டத்தை சிதறடிக்கின்றன. எனவே வளர்ந்து வரும் கற்றல் சமுதாயம் பாடசாலையில் இருந்து நீங்கி கல்வி உலகத்தினின்றும் வெகு தூரம் சென்று விடுகின்றது. தற்கால இளைஞர் உலகத்திற்கு இதனை உணர்த்தும் வகையில் தனது கட்டுரைகள் வளர வேண்டும் என்றும் எனது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அரசு சார்பற்ற நிறுவனங்களின் நாலாவது உலகப் பெண்கள் மகாநாடு 30-08-95 தொடக்கம் 08-09-95 வரை சீனா நாட்டின் தலைநகரான பீஜிங்கில் நடைபெற்றது. உலகெங்கும் இருந்து சுமார் 30 000 பெண்கள் கலந்து கொண்ட இம்மகாநாட்டை இலக்கிய வித்தகர் திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள் இலங்கையில் இருந்து சென்று சிறப்பித்தார். அவர் "சீனத்து நினைவுகள்" என்ற தலைப்பிலே தனது அந்தச் சீனப்பயணத்தை சுவையாகத் தருகின்றார். தூண்டியில் இது தொடராக வெளிவர உள்ளது.



# சீனத்து நினைவுகள் 1

பார்த்தீர்களா? காலநிலையும் கூட எங்களில் சில்லரைப் போலத்தான் திடீர் கோபம், திடீர் அழுகை திடீர் மூக்கைச் சிந்திப் போடுதல் உடனேயே சிரித்தல்!

அன்று காலை மழை தூறிக்கொண்டேயிருந்தது மத்தியானம் எங்கள் வாடிக்கைச் சைவ உணவு வியாபாரியிடம் சோறும் அவித்த மரக்கறிகளும் வாங்கிச் சாப்பிடும்போது கூடச் சிணுங்கிக்கொண்டிருந்தது. இரண்டு யுவானுக்கு ஐஸ்கிரீம் வாங்கிச் சாப்பிட்டபோது முனகல் நின்று (ஐஸ்கிரீம் பச்சைத் தண்ணீரை விட மலிவு பாருங்கள் உண்மையே தான் தண்ணீர் அரைப்போத்தல் 3 யுவான் இப்போது சிறு வெயிலாகச் சிரிக்கத் தொடங்கிவிட்டது.

மாலை மூன்று மணிக்கு (2 9-95) கலை கலாசார நிகழ்வுக் கருப்பொருளுக்குக் கீழே 'ஸ்பிரீற் டான்ஸ்' (Sprit dance) என்ற விடயத்தைப் பார்த்து இரவு கோட்டு வைத்துக் கொண்ட நினைவு வந்தது. தலைப்புக்குக்கீழே "ஆபிரிக்க நடனம் ஒலிகள், அசைவு, சுவாசம்) பிரக்ஞை ஆகிய வற்றுக் கூடாக ஒரு மனிதன் அகச்சம நிலை பெறுதல்" என்று குறிப்பிடப்பட்டிருந்ததைப்பார்த்த போதே இந்த வேலைப்பட்டறையைத் தவற விடுவதில்லை என்று தீர்மானித்தாயிற்று!

இப்போது 4M-12 என்ற இலக்க மிடப்பட்ட நிகழ்விடத்தை இந்தப் பெரிய பிரதேசத்தில் தேடிப்பிக்க வேண்டும் முதல் நாள் இந்தக் கருத்தரங்கச் சூழலில் சுயா

தினமாய் விடப்பட்ட போது கண்ணைக்கட்டிக் காட்டில் விட்டது போல் உணர்ந்தது மெய்! இப்போது ஒன்று தெரியும்! இதோ இந்த மஞ்சள் பிளவுஸ் அணிந்திருக்கும் சீனத்துக் கல்லூரி மாணவிகளைக் (தொண்டர் படைப் பிரிவு) கேட்டால் தேடிப்பிடிக்கக் கூடிய அளவு உதவி கிடைக்கும்.

ஒரு மஞ்சள் பிளவுஸ் காட்டிய திசையில் போய் 2ம் மாடி வரை ஏறித் திரும்பி இறங்கி முதலாம் மாடிக்கு வந்து ஒவ்வொரு கதவாய்ப் பார்த்து அப்பாடா! இதோ 4M-12

சுமார் எண்பது பேர் கொள்ளக்கூடிய பட்டறை அறை ஏறத்தாழ நிரம்பியிருந்தது. பட்டறையை நடத்துகிற செல்வி நானா கொறன்ரீமா (Nana Korantemma) ஏற்கெனவே முன்னுக்கு நின்று கொண்டிருந்தார் கறுப்பு இனப் பெண்ணாக இருந்தபோதிலும் முகத்தில் ஒரு சிரிப்பும் தேஜஸ்ஸும் நிரம்பியிருந்தது. ஏனோ தெரியவில்லை (முற்பிறப்பில் பக்கத்து வீட்டில் இருந்திருப்போமோ!) எனக்கு நானாவைப் பார்த்த உடனேயே மிகவும் பிடித்துபோய் விட்டது நிஜம்- எங்களையே பார்த்திருந்தது போல நானும் புஷ்பா கணேசலிங்கமும், அன்னலட்சுமி இராஜதுரையும் உள்ளே நுழைந்தவுடனேயே கதவு மூடப்பட்டு விட்டது.

முன்னுக்கு நின்ற நானா ''வாழ்வே ஒரு லயந்தான் இல்லையா?'' என்று கேட்டார். நாங்கள் சிரித்து வைத்தோம். தானும் சிரித்து விட்டு மேடையின் உள்ளே சென்றார். ஒரு பெரிய சுரைக்காய் வடிவத்தாளக் கருவியில் மணிகள் கட்டி, அதைத் தட்டிய படியே வந்து இரண்டு நிமிடம் அருமையான ஆட்டம் ஒன்று ஆடி நிறுத்தினார். அந்தச் சத்தம் காதில் விழுந்து மனதை நிரப்பி இரண்டு சொட்டு வெளியிலும் வழிந்தது! இவ்வளவும் அவர் அணிந்திருந்த சாதாரண அரைப்பாவாடை சட்டையுடனேயே நிகழ்ந்தது ஆட்டம் முடிந்ததா இல்லையா என்று நாங்கள் தீர்மானிக்க முதலே, ''ஒருக்கா எனக்குக் கைதட்டுங்கோவன்!'' என்று கேட்டுச் சிரித்தார். பிரமித்துப்போய் இருந்த நாங்கள் அதிலிருந்து விடுபட்டு இறுக்கமாக ஒரு முறை, கைதட்டி ஓய்ந்தோம்.

''சரி இப்ப எல்லாரும் தளர்வாய் இருப்பம், நல்ல ஆழமாய் மூச்சை உள்ளுக்கு எடுப்பம் கண்களை மூடுவம்...'' என்றார். அவரது முகத்துக்கு மட்டுமில்லை வார்த்தைகளுக்கும் ஒரு ஹிப்னோடிக் ஆற்றல் இருந்திருக்க வேண்டும் விதி விலக்கில்லாமல் எல்லோருமே தளர்ந்தோம். (சீனாவில் தளர் நிலைக்கு வருவதில் என்ன பிரச்சினை '' (ஷெல் விழும் என்ற பயமா? சுப்பர் சோனிக் அடிக்கும் என்ற பதற்றமா? ஒன்றும் இல்லைத்தானே!)

எம்மை சுற்றியுள்ள எல்லாப் பொருள்களிலும், எல்லா உயிர்களிலும் எல்லா நிகழ்வுகளிலும் ஒரு லயம் சார்ந்த அதிர்வு இருப்பது பற்றி மிகச் சுருக்கமான ஒரு விளக்கம் தந்தார். வானலையில் லைப் பந்தாடிச் செல்லும் வார்த்தைகள்! பின்னர் தான் எழுப்பும் ஒலிகளை எம்மை மீள ஒலிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

ஹா, ஹா, ஹா, ஹா,
ஹீ, ஹீ, ஹீ, ஹீ,
ஹெய், ஹெய், ஹெய், ஹெய்,
ஹொ, ஹொ, ஹொ, ஹொ,
ஹு, ஹு, ஹு, ஹு,

போன்ற ஒலிகளை அவர் ஒலித்த அதே சுருதி, உரப்பில், அதே இராகத்தில் நாங்கள் மீள ஒலித்தோம். ஒலிகளைச் சில சமயம் மிக நகைச்சுவையாக ஒலிப்பார். பின்னர் தானும் சேர்ந்து சிரிப்பார். ''சிரிப்பது உடலுக்கும் மனதுக்கும் ரொம்ப நல்லது. இல்லையே!'' என்று கேட்பார்.

மிக மெதுவாக இந்த ஒலிகளுக்கு ஏற்ற அசைவுகளைத் தான் செய்தார். பூப்போட்ட மண்ணிற அரைப் பாவாடையும் வெள்ளை பிளவுஸும் போட்ட அந்த இளம் உயிரின் அசைவில் ஒரு அதீத அழகு தெரிந்தது. ''இவர் ஒரு அரங்க நடிகையாக இருக்க வேண்டும்'' என்று நான் அன்னலட்சுமியின் காதில் முணுமுணுத்தேன்.

''சரியான சுகமான ஆட்டம் இல்லையா? விருப்பமான ஆக்கள் என்னோடை சேரலாமே!'' என்றார்.

சில கதிரைகள் வெறுமையாகின. அவரது தலையைப் போல இப்போது பத்து தலைகள் அசைந்தன.

''மற்றாக்கள் உங்களைப் பார்த்துப் பெருமைப்படினம். இப்ப அவையும் வரப் போயினம்'' என்றார். மீண்டும் சிரித்தார். இருபது சோடி தோள்கள் நானாவைப் போல் அசையத் தொடங்கின.

''எழும்பியவர்களுக்காக இருக்கிறவை கைதட்டுங்கோவன்...'' என்றார். கை தட்டல் பெரிது- மீண்டும் சிரிப்பு!

லய வாத்தியம் வேகமாய் ஒலிக்கத் தொடங்கியது. சபையில் அரைவாசிப்பேர் நானாவைப் போல இடது பக்கம் போய், வலதுபக்கம் போய் ஆடத் தொடங்கி விட்டனர்.

''இந்த ஆட்டம் எமது பிரதேசத்தில் ஆயிரக் காணக்கான நோயாளர்களைக் குணப்படுத்தி உள்ளது. உங்களுக்கு இதை பயில விருப்பமில்லையா?' என்று கேட்டார். மீண்டும் சிரித்தார். ஏறத்தாழ எல்லோரும் எழுந்து விட்டார்கள்.

''டிரம்'' ஒலித்துக்கொண்டிருக்க எண்பது பேரும் ஆடி முடித்தோம்.

''இந்தத் தாள ஒலி சில மூலிகைகள், மதச்சடங்குகள் ஆட்டம் பிரார்த்தனை இவற்றின் கூட்டினால் பல வேறு விதமான நோய்களை நாங்கள் மாற்றி விடுகிறோம்.'' என்று நானா விளக்கம் கூறி முடித்தார். நேரம் ஐந்து மணியை அண்மித்துக் கொண்டிருந்தது. அடுத்த பட்ட

றைக்குரிய நிகழ்விடத்தைத் தேடிப் பிடிக்க அரை மணி நேரம் தேவைப்படும். பலர் நானாவுக்கு அருகில் சென்று கதைத்துக் கொண்டிருந்தனர். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்திற்குக் காத்திருக்க முடியாத மன அவஸ்தையோடு நாங்கள் எங்களுக்குள் விமர்சித்து ரசித்தபடி அடுத்த நிகழ்வுக்குப் போய் விட்டோம்.

அடுத்த நாள் (3-9-95) அதே மூன்று மணிக்கு 4M-11 இல் நடைபெறும் 'ஸ்வீற் ஹனி' (Sweet honey) பட்டறையில் நானாவைச் சந்திப்போம் என்று யாருக்குத் தெரியும்? நாங்கள் கொஞ்சம் நேரத்தோடு போய்ப்பக்கத்து அறையில் காத்திருந்த போது நானா அங்கே வந்தார். எங்களைக் கண்டவுடனேயே ''ஹலோ! ஸ்ரீலங்கன் லேடிஸ் என்று சிரித்தபடி அருகில் வந்தார். நேற்று எங்களுடன் கதைக்காமலே எங்கள் கழுத்தில் தொங்கிய 'இலக்கத்தகடுகளில்' இருந்து எங்கள் நாட்டை அவதானித்து வைத்திருக்கிறார். (இந்த இலக்கத் தகடு சொறி, அறிமுக அட்டை கழுத்தில் தொங்காமல் மகாநாட்டு மண்டபத்துக்குள் மட்டுமில்லை மகாநாட்டுக்குச் செல்லும் பஸ்ஸுக்குள்கூட ஏறமுடியாது போங்கள்!) ஒரு அரைமணி நேரம் நாங்கள் மனம் விட்டு மிக நெருக்கமாக உரையாடினோம்.

அட யார் சொன்னது நானா ஒரு அரங்க நடிகை என்று! என்னுடைய மூளையைச் செருப்பால் அடிக்க வேண்டும் அவர் அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒன்றில் விரிவுரையாளராக இருக்கிறார். டாக்டர் பட்டம் பெற்றிருக்கிறார். ஆபிரிக்கக் கலாசாரம் அவரது பாடம். நானாவின் 'அம்மம்மா' கானாவில் இருக்கிறார். அவர் தான் இந்த நடனத்தின் வேர். அமெரிக்காவில் பல்கலைக்கழக படிப்பை முடித்துக் கொண்ட பிறகு நானா தனது தாய் நாட்டுக்குச் சென்று ஒரு வருடம் தங்கியிருந்து இந்த நடனம் தாளம் மருத்துவம், சடங்கு எல்லாவற்றையும் பயின்று தனது கல்விதரத்துக்கு ஏற்றபடி சிலமாற்றங்களைச் செய்து இப்போது அமெரிக்காவில் பயன்படுத்துகின்றார். இவரது Asona Aberade Shrine சபையில் பல நூற்றுக்கணக்கானோர் நன்மை பெறுகிறார்கள்.

நானா சொன்னார், ''நான் அமெரிக்காவில் தான் முழுமையாகப் படித்தேன். அப்போதெல்லாம் அவர்கள் ஆபிரிக்காவைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. அங்கே ஒன்றும் இல்லை என்பது போலத்தான் கற்பித்தார்கள். ஆனால் எனது டாக்டர் பட்டமும் முடிந்த பிறகுதான் எனக்குத் தெரிகிறது - ஆபிரிக்கக் கலை, கலாசாரத்தில் எவ்வளவு விடயங்கள் இருக்கின்றன என்று!'' திடீரென்று நிறுத்தினார்;

''ஏன் உங்களிடம் இப்படி ஒரு தியேட்டர் இல்லையா? மரபு வழி வடிவம்? பக்தி கலந்த வடிவம்? நம்பிக்கை சேர்ந்த ஆட்டம்?''

''இருக்கிறதே - காத்தவராயன் போல, - காமன் கூத்துப்போல!''

நான் புஷ்பாவையும், அன்னலட்சுமியையும் பார்த்தேன். அவர்கள் தலை அசைத்து ஒப்புதல் தெரிவித்தார்கள். ''அதில் ஒரு பகுதியை எனக்குப் பாடி ஆடிக் காட்டுங்களேன்!'' நானா மிக உற்சாகமாகி விட்டார்.

''கோகிலா ஆடுவா'' புஷ்பா என்னைக் காட்டிவிட்டார். ''சரி இது சீனாதானே - யார் விமர்சனம் செய்யப் போகிறார்கள்?'' என்ற தைரியத்தில் நானும் ''ஆதி சிவன் மைந்தனல்லோ, நானும் ஆதிக் காத்தான் ஓடி வாறேன் சபையோரே!'' என்று இரண்டு வரி பாடிஆடிக் காட்டினேன். நானா கண் இமைக்காமல் பார்த்துக்கொண்டே இருந்தார்.

''இதோ இருக்கிறதே!'' என்று சிரித்தார். அதே காந்த சக்திச் சிரிப்பு! இதற்கு நாங்கள் பாவிக்கும் தாள வாத்தியம் பற்றி விளக்கமாக கேட்டறிந்தார் இதன் அடியில் உள்ள சமய நம்பிக்கை பற்றிக் கேட்டார். பிறகு சொன்னார்.

''நிச்சயமாக இதை நீங்கள் உங்கள் யுத்தப்பிரதேசத்தில் குணப்படுத்தலுக்குப் பாவிக்க முடியும்! எல்லாவற்றுக்கும் நாங்கள் அமெரிக்காவையும், ஐரோப்பாவையும் எதிர்பார்ப்பது பிழை'' என்றார். அவரது தன்னம்பிக்கை என்னை அதிசயிக்க வைத்தது.

''நான் அடுத்த ஓரிரு வருடங்களில் உலகச் சுற்றுப் பயணம் ஒன்று செய்ய இருக்கின்றேன். அப்போது இலங்கைக்கும் வருகிறேன் உங்கள் தமிழ்க் கூத்துக்களையும், எங்கள் ஸ்பிரிற் டான்சையும் பரிமாறிக்கொள்வோம்' என்றார்.

''எங்கள் நாட்டின் போர் நிலை, உங்கள் வருகையை அனுமதிக்குமாயின் உங்களை நாங்கள் யாழ்ப்பாணத்தில் வரவேற்போம்'' என்று சொன்னேன். நம்பிக்கை தானே வாழ்வின் உயிர் மூச்சு? நம்பிக்கையுடன் நாங்கள் விலாசங்களைப் பரிமாறிக் கொண்டோம். (எங்களுக்கு ஃபோன் நம்பர் எதுவும் கிடையாது என்பதை வெட்கமின்றிச் சொல்லி வைத்தோம். விலாசம் கூட மாதத்திற்கு மாதம் மாறும் என்பதை சொல்லவில்லை.)

'நானா' என்ற ஃபிலடெல்பியா விரிவுரையாளரின் முகம் இன்னும் என் கண் முன்னால் மிக வலுவுடன் சிரிக்கிறது!

(தொடரும்)

யாழ்ப்பாண,
மேலதிக அரசாங்க அதிபர்,
து.வைத்திலிங்கம்
எழுதிய பல்சுவை கதை,
அடுத்த இதழில் வெளிவருகிறது.

# நினைவே கனக்கிறது

ஆறுமாத அஞ்ஞாத வாசம்!
மீண்டு வந்தேன் வீடு நிற்கிறதே!
வீட்டின் மேலே கூரைநிற்கிறதே!
உடைமைகள் ஒருசில களவு போனாலும்
பெரும்பாலானவை இருந்தன; கிடந்தன
மிதிவெடி எதையும் மிதித்திலம்;
'ஆண்டவன் பேரருளால்
நாம் பிழைத்தனம்' என்று
ஆறுதலாகச் சுற்றிப் பார்க்கிறேன்
வழமையாய் என்னை வரவேற்கின்ற
சீவன் 'கறுவல்' இல்லை!
சிவ சிவா!
அயலெல்லாம் பார்க்கிறேன்;
பாதை, கிணற்றடி, பற்றை, பறுகெலாம்
அன்றும் அடுத்த ஒருசில நாளும்
தடவித்தடவிப் பார்த்துச் சலித்தேன்!

★ ★

மனமோ ஐப்பசி மாதத்(து)
ஒருநாள் மாலைப் பொழுதை
இரை மீட்கிறது:
வாழ்ந்த மண்ணை - மனையைத் துறந்து
கையில் ஓரிருபைகள் எடுத்து,
குழந்தை குட்டிகளை,
இழுடுகட்டைகளை
ஏற்றிப் புறப்படும் வேளை—
நீ நின்றாய், காவலாய்!
நாம் கைவிட்ட வீட்டுக்குக்
காவலாய்
கடமை வீரனாய் நின்றாய்!

★ ★

பிறகு—
புகலிடத்லிருந்து மும்முறை வந்தேன்
—கையில் உணவுப் பொதியுடன்!
கண்டதும்,
களிகொண்டு தாவினாய்,
குதித்தாய், மோந்தாய்,
சுற்றி ஓடி ஏதேதோ சொன்னாய்!
மூன்றாம் முறை—
பிரிவுதாங்காது
—உள்ளுணர்வு ஏதோ உணர்த்தியதாலோ!—
பின்னே தொடர்ந்தாய்;
திரும்ப மறுத்தாய்!
கல்லாய் மனசை இறுக்கிக்கொண்டு
கல்லால் எறிந்துனை நனே துரத்தினேன்!

இன்று—
நீயில்லை—உன்றன்
நினைவே கனக்கிறது
ஒவ்வொரு நாயையும் உற்றுப் பார்க்கிறேன்;
அவையோ—
குட்டை பிடித்து மயிரெல்லாம் கொட்டி
அலைந்து திரியும் அங்காடி நாய்கள்!
மனித சகவாசம் இன்றி,
சூனியப் பகுதியில் அடிக்கடி கேட்கும்
துப்பாக்கி வேட்டொலிக்கு ஆற்றாது ஓடி
பயந்து, பயந்து,
பழக்க தோஷத்தால்,
மீண்டு வந்த மனிதரைக்கண்டு
விலகி ஓடும் அநாதை நாய்கள்!

★ ★

அவற்றிடை—
நீயில்லை—உன்றன்
நினைவே கனக்கிறது!
நாம் கைவிட்ட வீட்டை
காக்கும் முயற்சியில்
உயிர்விட்டிருப்பாய் என்ற உண்மை
உறைக்கும் போதெலாம்
குற்ற உணர்வால் குறுகிப் போகிறேன்!

★ ★


உடைந்த வீடுகள்
இழந்த உடைமைகள்
பிரிந்த உறவுகள்
பெயர்ந்த மனிதர்
என்று
ஐந்தொகைக் கணக்கு முடிக்கும் வேளையில்
உன்பேரில் உள்ள 'வரவு'
என்னிடம் நீ 'பற்றி' யதைவிட
பன்மடங்கு அதிகம்—
பதியப்பட்டுள்ளது!
அகதியால் கடனை அடைக்க முடியுமா?
'அழித்து எழுதலாம் என்றாலோ
அனுமதி தர நீ அருகில் இல்லையே!

— சோ. பத்மநாதன்

★

இறுதியாக.........கூறிய வார்த்தை.........
உலகம் ஓர் உன்னத தலைவனை இழக்கிறது...... அந்தோ
நீரோ மன்னன் தன்னைக் கத்தியால் குத்திய வண்ணம் கூறியது.

★



# வகுப்பறையில் அவர்கள் கற்பிக்காதவை

குரு: தன்னம்பிக்கை உள்ளவனாக, ஒழிவு மறைவின்றி எடுத்துரைக்கக் கூடியவனாக பிறரைக்கவரக் கூடியவனாக, பிரச்சினைக்கு முகங் கொடுக்கக்கூடியவனாக என்றும் திகழ்வாயாக.

மாணவன்; நன்றாகச் சொன்னீர்கள். என்னால் இயலுமானால் கடைப்பிடிப்பேன் ஆனால் இப்பண்புகளை எவ்வாறு நான் பெறலாமென நீங்கள் கூறவில்லையே?

எம்மிடம் காணப்படும் சில உள்ளகப் பண்புகளின் பிரதிபலிப்பே மேற்கூறப்பட்ட நடத்தைகளாகும். நாம் இவற்றினைவளர்த்துக் கொள்ளமுடியும்.

மகாத்மா காந்தியினை நாம் எல்லோரும் அறிவோம். கோடிக்கணக்கான மக்களை தன்பால் கவர்ந்து இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தினை வெற்றிகரமாக முன்னெடுத்துச் சென்றவர். தனது எண்ணங்களாலும், செயலாலும், லட்சியத்தாலும், உறுதியாலும், சத்திய நெறிகளாலும், தியாகத்தாலும் தன்னை நடளாவிய ரீதியில் உயர்த்திக் கொண்டவர் மகாத்மாகாந்தி ஆவார்.

மகாத்மா காந்தியின் இளவயது அனுபவம் பற்றி ஓர் நூலாசிரியர் பின்வருமாறு கூறுகின்றார்:-'மோகன் தாஸ்காந்தி என்ற இளைஞன் வழக்கு அறிஞராக வாழ்வைத் தொடங்கினார். முதல் வழக்கின்போது வாதிட எழுந்தார் காந்தி. கண்கள் இருண்டன. காதுகள் பஞ்சடைந்தன. நாத் தழுத்தழுத்தது. அழாத குறையாக அவர் அமர்ந்தார். பிற வழக்கறிஞர்களும் நீதிபதியும் புன்னகைத்திருக்கக் கூடும். ஆனால் காந்தி அதனை உணரும் நிலையில் இல்லை. அத்தகைய மனிதர் இந்தியாவின் விடுதலைக் கோரிக்கையை எடுத்துத்துக் கொண்டு இங்கிலாந்தின் நாடாளு மன்றத்திலே பின்னால் விவாதித்தார். எத்தகைய மாற்றம் பாருங்கள்''

பயத்தால் பீடிக்கப்பட்டிருந்தவர் தன்னம்பிக்கைமூலம் அதில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டார். எதனைக் கண்டு பயப்படுகிறீர்களோ அதில் சிறிது சிறிதாக நீங்கள் ஈடுபட்டு வரும் பொழுது உங்கள் தன்னம்பிக்கை படிப்ப யாக வளரும். தன்னம்பிக்கை உருவாகும் பொழுது பயம் தானாக விலகிவிடும்.

தாழ்வு மனப்பான்மையும் தன்னம்பிக்கையை பாதித்து விடும். உலகில் உங்களிலும் பார்க்க திறமை, அறிவு. ஆற்றல், வலிமை ஆகியவற்றில் சிறந்தார் பலர் இருப்பர். அவர்களுடன் உங்களை ஒப்பிட்டு மனம் புழுங்கி நீங்கள் ஒதுங்கினால் அது உங்களையே அழிப்பதாக முடியும். உங்களில் எத்தனையோ பேர் சபையில் கடைசி வாங்கில் அமர்ந்து விட்டு சந்தடியில்லாமல் எழுந்து வருவதில்லையா? உங்களை யாருமே கண்டு கொள்ளப் போவதேயில்லை.

நாம் விரும்பாதவற்றைக் கூடப் பிறர் கூறும் பொழுது பொறுமையாகக்கேட்கக்கற்றுக் கொள்ளுங்கள். அரசியல் தலைவர்கள் பலர் விமர்சனங்களைக் கேட்டுப் பொறுக்காமல் பத்திரிகை தணிக்கையை அமுல்படுத்தி பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறித்துள்ளனர். அதன் விளைவாக நாட்டு நடப்பு எதுவும் தெரிய அவர்களுக்கு வாய்ப்பில்லை. இந்நிலை அவர்களை அழிவுக்கே இட்டுச் சென்றுள்ளது.

கட்டிளமைப் பருவத்தினர் சகபாடிகளுடன் உறவாடுவதை மிகவும் விரும்புவர். இக்காலப் பருவத்தில் அவர்கள் நல்ல வழி காட்டலுடன் அமைந்த அமைப்புக்களில் இணைவதன் மூலம் தங்கள் சக்திகளை, புலன்களைப் பயனுள்ள முறையில் நெறிப்படுத்தமுடியும். சாரணியம், விளையாட்டுக் கழகங்கள், சேவைக்கழகங்கள் போன்றவற்றில் ஈடுபடுவதால் பல தேவையான, விரும்பத்தக்க, சீரிய பண்புகளை வளர்த்துக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்கள் | உருவாகும். ஒழுக்கக் கட்டுப்பாடு, உடற்பயிற்சி, கடமை உணர்ச்சி, தலைமைத்துவப் பண்புக்கூறுகள் போன்ற இன்னோரன்னபண்புகளைகற்றுக்கொள்ளும்சந்தர்ப்பங்கள் பல ஏற்படுகின்றன. விளையாட்டு மைதானங்கள், சதுரங்கம் மற்றும் உள்ளக விளையாட்டுக்கள்,

முன்னாள் யாழ் இந்துக் கல்லூரி
அதிபர்
அ. பஞ்சலிங்கம்

கழக நிர்வாகங்கள் போன்றவற்றில் சடுதியான தீர்மானங்கள் எடுக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் பல; எதிர்த்தரப்பின் நகர்விற்கு ஏற்ப திட்டமிட்டு செயற்பட வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏராளம்; அணியாகத் தொழிற்பட வேண்டிய தேவை; தோல்விகளைக் கண்டு தொய்வடையாது மனம் சலிக்காது தொடர்ந்தும் செயற்படும் மனப்பாங்கு. இவைபோன்ற பண்புகள் பலவற்றை எம்மை அறியாமலேயே கற்றுக் கொள்கின்றோம். வருங் காலத்திற்கான நல்வாழ்வின் பயிற்சிக் களங்களாக இவை அமைகின்றன. ஒரு பெரிய நாடொன்றின் முன்னாள் பிரதமர் சிற்றுண்டி வேளையில் தேநீரா அல்லது காப்பியா எடுப்பதென்று தீர்மானிக்க பல நிமிடங்கள் எடுக்குமாம். இவ்வாறு தீர்மா

மானம் எடுக்கத்தத்தளிக்கும் இவர் பிற்பாடு ஒரு இராணுவ தலையீட்டின் மூலம் அவமானப்பட்டது ஆச்சரியமான விடயமல்ல.

எமது பேச்சிலும் செயலிலும் உண்மை, விசுவாசம் பொதிந்திருத்தல் வேண்டும்; கபடம் இருப்பின் அது எம்மைச் சங்கடமான நிலைமைக்கு இட்டுச் சென்றுவிடும். நிக்சன் என்ற முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியினை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அவர் ஜனாதிபதியாக வருவதற்குப் பல வருடங்களுக்கு முன் நடந்த சம்பவமொன்றினை ஒரு நூலாசிரியர் தனது நூலில் கூறுகின்றார். இந்நூலாசிரியரும் அவரது நண்பர் ஒருவரும் ஒரு விடுதியில் உணவருந்திக் கொண்டிருக்கும் பொழுது நிக்சனும் அவ்விடுதிக்கு வருகை தந்திருந்தார். நூலாசிரியரின் நண்பரைக் கண்டதும் வந்து அவருடன் பேசினார். இதன் பின் சில தினங்களில் நூலாசிரியரும் வேறொரு நண்பரும் ஒன்றாக இருக்கும் வேளையில் நிக்சன் தற்செயலாக அங்கு வரநேர்ந்தது. இந்த நண்பரைக் கண்டதும் நிக்சன் அவரிடமும் வந்து பேசினார்

இங்கே கவனிக்க வேண்டியது யாதெனில், இரு சந்தர்ப்பங்களிலும் நிக்சன் மகிழ்ச்சிபொங்கப் பேசினார். ஆனால் இரு வேளைகளிலும் அவர் ஒரே வார்த்தைகளையும் ஒரே வகையான ஆறு ஏழு வசனங்களையுமே உபயோகித்தார் என்பதாகும். இங்கு குறிப்பிட்ட நூலாசிரியரின் நண்பர்கள் இருவரும் விளையாட்டுத்துறையினைச் சார்ந்தவர்கள். இதனைப் பார்க்கும் பொழுது நிக்சன் அவர்கள் ஒவ்வொரு துறையினருக்குமெனச் சில வசனங்களைக் கையிருப்பில் வைத்துள்ளார்போல் தெரிகின்றது இச்செயற்பாடு அவர் உயிருள்ள மனிதனுடன் பேசாது மரக்கட்டை ஒன்றுடன் பேசுமாப்போல் அமைகின்றது.

இந்நிகழ்வுக்குப் பத்து வருடங்களின்பின் நிக்சன் அவர்கள் வாட்டகேற் ஊழலில் சம்பந்தப்பட்டு அவமானமடைந்து ஜனாதிபதி பதவியிலிருந்து விலகியது அவரின் போலி நடத்தையின் விளைவேயாகும்.

நீங்கள் ஒருலட்சியத்தைக் குறிக்கோளாக வைத்துச் செயற்படுவீர்களேயானால், அதில் முழுமனதுடன் திடசங்கற்பத்துடன் ஈடுபடுவீர்களேயானால், அந்த லட்சியம் எனும் மகத்தான சக்தி சாதிக்க முடியாதவற்றையெல்லாம் சாதிக்கும். தென் ஆபிரிக்க ஜனாபதி நெல்சன் மண்டேலா தனது சுயசரிதை நூலில் கூறுகின்றார். தனது மக்கள் தங்கள் வாழ்க்கையை கௌரவமாகவும் சுயமரியாதையுடனும் வாழ வகைசெய்ய வேண்டுமென்ற தனது லட்சியம் தன்னுள் ஒரு புத்துணர்ச்சியையும் பயந்தசுபாவமுள்ள அவரை எதற்கும் துணிந்தவராகவும் சட்டதிட்டங்களுக்குக் கீழ்படிந்து நடந்த ஒரு சட்டத்தரணியான அவரைச் சட்டத்தை மதியாதவராகவும் மாற்றியதாகக் கூறுகின்றார்.

பிற்கால வாழ்க்கையில் நீங்கள் அடையும் வெற்றி-தோல்வி, முன்னேற்றம்- பின்னடைவு, கௌரவம்-அவமானம் ஆகிய யாவும் உங்களுக்கு இளவயதில் கிடைக்கின்ற, களத்தில் நீங்கள் பெறும் பயிற்சியின் பெறுபேறுகளே ஆகும். எனவே உங்கள் இளவயதில் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை சரியாகப் பயன்படுத்துங்கள்.

## ★ அருள்வழிச் சிந்தனைகள் - I

# சூரசங்ஹாரங்கள்

அநீதியும் அதர்மமும் அஞ்ஞானமும் அழித்து அன்பர்களை ஆட்கொள்ள ஆண்டவன் செய்யும் திருவிளையாடல்கள் ஆனந்தம்.

இவற்றில் அப்பன் கந்தவேள், ஞானமே வடிவாகி வந்து ஆணவமே உருவான அரக்கன் சூரபன்மாவை அழித்து ஆன்மாக்களை இரட்சித்த நாள் சூரசம்ஹார தினம்! எத்துணைக் கொடியவரானாலும், தம்மை உணர்ந்து ஆண்டவனை அண்டி அருள் வேண்டுவாரானால் அவர்களுக்கும் இறைவன் அபயம் அளிக்கவல்லான்.

"தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன் னுற்றால்
தூயவராகி மண்மேல் தொல்கதி அடைவ ரென்கை
ஆயவும் வேண்டும் கொல்லோ அடுசமர் செய்து பன்னாள்
மாயையும் மகனுமன்றோ வரம்பிலா அருள் பெற்றுய்ந்தான்.

என்பது கந்தபுராணம் காட்டும் அருள்வழிச் சிந்தனையாகும்.

எத்துணைச் சிவபக்தனாயிருந்தவன், தான் வரம் வாங்கிய அக்கடவுளின் குமரனையே எதிர்க்கத் துணிந்தானே!

தீட்டிய மரத்தில் கூர்பார்ப்பது போல; சூரன் மாய்ந்தது கந்தன் கைவேலினால் அல்ல - அவனால் மறக்கப்பட்ட நன்றியான் தான்!

### கஜமுக சம்ஹாரம்

மாகத முனிவனுக்கும் விபுதை என்ற அசுர கன்னிகைக்கும் பிறந்தவன் கஜமுக அவுணன். யானைமுகமும் அசரயாக்கையும் பலகரங்களும் உடைய விசித்திர தோற்றம் கொண்ட பெருவிறல் வீரன். அவன் அசுரகுருவான சுக்கிராச்சாரியாரின் உபதேசப்படி யாருமே இயற்ற முடியாத தவத்தை மூவாயிரம் ஆண்டுகள் செய்தான். அக்கினியின் மேல் ஒற்றைக்காலில் நின்று இறைவனைத் தியானித்தவனுக்கு பெருங்கருணைத் தடங்கலாகிய பெருமான் கேட்ட வரங்களைக் கொடுத்துவிட்டார்.

பொல்லாத வரங்கள் — சாணக்கியமாகவே கேட்டுவிட்டான் கஜமுகன்.

தேவரோ, மனிதரோ, விலங்குகளோ, பிற உயிரினங்களோ என்னைக் கொல்ல முடியாதவகை என் உயிர் பிரியாதபடி எனக்கொரு வச்சிரயாக்கை வேண்டும்.

குற்றும், வெட்டும், எய்யும், எறியும் எவ்வகை ஆயுதங்களாலும், வான் படைகளினாலும் நான் அழியக்கூடாது. இதற்கு மேலாக, ஆண்டவனே! நான் ஏதாவது சூழ்ச்சிகாரணமாக இறக்க நேரிட்டால், பிறப்பு என்று

எனக்கு எதுவுமே தராத ''நான் உன்னை மறக்காத'' ஞானத்தையும் எனக்கு தந்தருள வேண்டும். என்று வேண்டினான் அந்த அசுரன். அசுரனானாலும் எவ்வளவு தெய்வீகப் பிடிப்பு அவனுக்கு.

வரம்பெற்ற அசுரனுக்கு அதிகாரச்செருக்கு, ஆணவம், ''தன்னை வெல்வார் யாரினி''? என்று தலை தெறிக்க நடக்கிறான்..

தேவர்குலம், முனிபுங்கவர்கள், மன்பதை எல்லாம் கஜமுகனின் கடுங்கோலாட்சியால் கதிகலங்கின. ஆன்மாக்களின் அழுகை அரன்செவியில் ஏறுகிறது. ஆண்டவன் அசைந்தான் — பிள்ளையார் உதயமாகினார்!

பிடியதன் உருஉமைகொள. மிகு கரியது
வடிகொடு, தனது அடிவழிபடும் அவர் இடர் (கெட)
கடி கணபதி வர......''

அருளினார் கடவுள்.

பொருத்தமான வேளையும் வந்தது. கஜமுக அவுணனைச் சங்காரம் செய்தார் கணபதி. கத்தியால், வாளினால், அம்பினால், ஆயுதங்களினாலா அவன் மாய்ந்தான்?- இல்லவே இல்லை.

கஜமுகனை, அந்தக் கஜமுகக் கணபதி தன் ''வலப்புற மருப்பை'' ஒடித்து அவன் மார்புமேல் எறிந்தே கொன்றார்.

அசுரன் கேட்டவரம் எட்டுணையும் பிழைக்கவில்லை.

கடவுள் அவனை ஆகு வாகனமாக்கி தன் அடிக்கீழ் வைத்துக் கொண்டிருக்கிறார்.

M. S. ஸ்ரீதயாளன்
தமிழ்த்துறைக் கல்வி ஆலோசகர்.

இது கஜமுக சங்காரம்;
அன்று ஒரு சூரசங்ஹாரம்,
ஒன்று அரன்மூத்தபிள்ளை செய்தபோர்.
ஒன்று அவனின் இளைய பிள்ளை செய்தபோர்.

''ஆணவம்'' — வலி அடக்கப்பட்டு ஒடுக்கப்படக் கூடியதே அன்றி அழியக் கூடியதொன்றல்ல — இது சைவ சித்தாந்தம்.

கந்தக்கடவுளைக் கையெடுத்து வணங்கும் நாம் கூடவே, அவன் சேவற்கொடியையும், மயில்வாகனத்தையும் வணங்கியே நிற்கின்றோம்.

கணபதியோடு அவ்வைங்கரன் ஊர்தியாம் ஆகு (பெருச்சாளி) வையும் வணங்குகிறோமல்லவா?

அசுரர்களாயினும் அவர்கள் பெரிய பக்திமான்கள்!

நன்றி மறத்தல் ஒரு பாவம். அதனிலும் பாவம் ஒருவர் செய்த நன்றிகொல்லுதல்.

சூரசங்காரமும், கஜமுகசங்காரமும் எமக்கு உணர்த்தும் படிப்பினைகளை இன்று நாம் நினைந்து அருள்வழி வாழ்வோம்.

சூரசங்காரங்கள் அன்று அல்ல இன்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நடைபெறவேண்டியன. எம்மிடத்திலே-நம் ஒவ்வொரு வருடத்திலேயும் சூரசங்காரங்கள் நடந்து கொண்டுதானிருக்கின்றன. எம்மிடத்துள்ள எம்மிடையேயுள்ள சூரர்களை நாம் தினமும், ஒவ்வொரு நிமிடமும் சந்தித்த வண்ணமே இருக்கிறோமென்பதை நாம் இலகுவில் உணருவதில்லை.

யாரந்த சூரர்கள்? யார் அந்த பகைவர்கள்?

பார்ப்பான் அகத்தில் பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பார் இன்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் வந்து வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசு ஐந்தும் பாலாய்ச் சொரியுமே

புறப்பகைகளை வெற்றிகொள்ளுதல் எளிது, குற்றுதல், வெட்டுதல், எறிதல், எய்தல், ஏவுதல் வான்படையால் அழித்தல், அடித்தல் முதலாம் செய்கைகளினால் உண்டாகும், பகைகாரணமான காரியங்களை எத்தனித்து சாதாரணமாக மரணத்தையே வெற்றி கொள்ளலாம்- இவையனைத்தும் புறப்பகைகள் - எம்முடலுக்கு வெளியே இருந்து தாக்கும் ஆயுதங்களிவை. ஆயின் எமது உடலுக்குள்ளேயே இருந்து எம்மை எமது ஆன்மாவையே பகைத்து எம்மைக் கொல்லும் அகப்பகைகளை நாம் எப்படியாவது வெற்றிகொள்ள வேண்டுமானால் என்ன செய்யலாம்? அதற்கான மார்க்கத்தையே திருமூலர்பிரான் மேற்கண்டவாறு குறித்தார். ஆம்; ஐம்புலப்பகையை வென்று ஆன்மாவை அடக்கும் ஆற்றல் நம்மிடத்தில் ஏற வேண்டும். அதுவே உயிருக்கும், உணர்வுக்கும், ஆத்மாவுக்கும் வெற்றிதரும் மார்க்கமுமாகும்.

★

## தலைவரிற்கு

## வாழ்த்துக்கள்

★



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறையின் முதலாம் தர முதுகலை விரிவுரையாளராகத் திகழ்ந்து வந்த கலாநிதி

நா. சுப்பிரமணியன்

அவர்கள் இப்பொழுது தற்காலிகத் தமிழ்த் துறைத் தலைவராக பதவி நிலை உயர்வு பெற்றுள்ளார். மிக விரைவில் இவர் ''பேராசிரியர்'' என்ற உயர் தகுதியையும் எய்திச் சிறப்படைய வேண்டுமென மனதார வாழ்த்துகிறோம்.

உருவகக்கதை

# பனங்கிளி

செம்பியன் செல்வன்

வரண்ட மணற்றிடருக்கும் ஈரமுண்டு; பசுமை நிறை உயிருமுண்டு என்றான பனங்கூடல். வடலியும் அவற்றிடையே ஆங்காங்கு வானோக்கி வளர்ந்த பனைகளுமாய்... மணற்கரையிட்ட நீல வானம் என விண்ணும் மண்ணுமாய் வியாபித்து விசுவரூபம் எடுத்த விசும்பாய்க் கலந்த மோனநிலை, அது சிருஷ்டி இரகஸ்யங்களாய் எழும் உயிர்த்துவ நடனமிடும் பிரபஞ்சபூமி.

கடலலையும், காற்றசைவும் கலந்து பேசும் மொழியின் பின்னணியில் வெண்மணற்பரப்பும்... நெட்டைப்பனைகளின் கரிய மேனியும்... நீலவானும்... பச்சைத்தலை முடியும்... மாலைச் சூரிய வர்ணச் சிதறல்களுமான அந்த ஓவியச் சேர்க்கை...

ஓவியத்துக்கு உயிரூட்டுமாப் போல்... கடலருகே, ஆங்காங்கே சிறுசிறு குடிசைகள்... மனிதக் காலடித் தடங்கள்... குடிசைகளின் முகடுகிழித்து எழும் புகைச் சுருள்கள்... காகம், மைனா, கிளி, புளுனிகள், குயில்கள் எழுப்பும் ஜீவஜீப்த ராகங்கள்... பாலையிலும் பால் தரும் பசுக் கூட்டங்களும்... ஆட்டு மந்தைகளும்... சுயேச்சையான நடமாட்டங்களும்... தென்றலாய்ப் பிரபஞ்சம் ஒரு முறை மூச்சு விட்டது. பனையோலைகள் சலசலத்து ஆடியசைந்தன. காவோலைகள் உறவு இற்று வீழ்ந்து காலத்தினை பதிவேட்டில் குறித்துக் கொண்டன. குருத்துக்கள் இளமை மதமதர்ப்பில் இளமஞ்சள் மேனியின் பசுமைத் திற்றலுடன் உல்லாசமாகச் சிறகு விரித்தன. அந்தக் குருத்து நுனிகளில் பனங்கிளிகள் ஊஞ்சல் ஆடின.

இளமையும் அழகும், இயற்கையும் கலையும்.
அசைவும் இசைவும்.
காற்றில் எங்கோ அபாப்வரம் வெடித்தது.
இயற்கைச் சமநிலை குலைந்தது.
தடுமாற்றம்.
காற்றும் பனங்கிளிகளும் 'தட்டுமறித்து' விளையாடின'
காற்றின் வேகம் திடீரெனக் கூடியது.
இயற்கையின் சமநிலைக் கலைப்பு.
ஆ!... என்ன விபரீதம்.

அந்த அநுபவம் இதுவரை கிடைத்திராத புதிய ஒன்றின் இளங்கிளி. காற்பிடி தவறி பனையோலை ஊஞ்சலிலிருந்தும் தலைக்குப்பற 'விர்' ரென்று மண்ணைநோக்கி

வழியில் அது தன்னை எப்படியோ சுதாகரித்துக் கொண்டது. சமீபத்தில்தான் அதற்கு மெலிதான இறக்கைகள் முளைக்க ஆரம்பித்திருந்தன. அது பாதி வழியிலே தன்தலையை உயர்த்திப் பார்த்தது.

பனை உச்சி விண்தொடத் தெரிந்தது.

புள்ளிப் பறவைகளாக தாய்க்கிளியும்... தந்தைக் கிளியும்... சகோதரக்கிளிகளும்... உறவுக்கிளிகளும் பரிதவிப்பது தெரிந்தது. இதற்கோ அழுகை அழுகையாக வந்தது.

அது பறக்கப்பறக்க முயன்று இறக்கைகளை அடிக்க அடிக்க... சில அடிகளே பூமியினின்றும் உயர முயன்று. சில நொடிகளே அந்தரத்தில் நீடித்து... 'பொத் பொத் என நிலத்தில் விழுந்து, விழுந்து எழும்பியது...

அது எழுந்து, எழுந்து... விழுந்து... விழுந்து... பரிதவிப்பதைப் பார்த்து ஏனைய பறவைகள் சிரித்தன. இளங்கிளி அவற்றைச் சீற்றத்துடன் பார்த்தது.

'நான் எப்படியும் என் தாயகத்தை... அடைந்து விடுவேன்'.

'உன்னால் எப்படி அந்த உச்சியை அடையமுடியும்? யாராவது எங்களில் மேம்பட்டவன் உதவினாலன்றி நீ பிறந்த தாயகத்தை மீண்டடைய முடியாது...'— ஏனைய பறவைகள் கூறின.

'எனக்கு உதவ வருபவன்... உதவிக்கு பதிலாக உபத்திரம் செய்பவனாக இருந்தால்... ஏனென்றால் எந்தப் பெரியவன் எந்த உதவிக்குச் சென்றாலும் அவன் உள் நோக்கம் சுயநலம் தாங்கியதாகத்தான் இருக்கும்...'

'இந்த எண்ணம் கொண்ட நீ ஒரு போதும் உன் தாயகத்தை அடைந்து விடமாட்டாய்! நீ எங்கே... உச்சி எங்கே?— என்று சாபமிடுவது போல் பிற பறவைகள் கூறிப் பறந்தன.

ஒரு மனிதகரம் நீண்டு அந்த இளங்கிளியை எட்டி எடுத்தது.

## 2

மனிதன் கிளியுடன் தன் குடிசையை அடைந்தான். பனைமட்டை வரிச்சுக்களால்ஆன சுவர்கள், மறைப்புகள்.

கிளியைப் புரட்டிப், புரட்டிப் பார்த்தான்.

'நாக்குரிக்க வேண்டும். செட்டை வெட்ட வேண்டும்.

இப்போது நேரமில்லை. வெளிக்கிட்ட வேலையை முடித்துவிட்டுப் பிறகு பாப்பம், கிளியை குடிசையின் உட்புறமாக வீசினான். குடிசை வாயிலைச் சாத்திப் பூட்டினான். நடக்கத் தொடங்கினான்.

கிளி குடிசைக்குள் ஆலவட்டமாக, தெத்தித், தெத்திப் பறந்தது. 'வெளியேற வேண்டும்.'

அதற்கு வெறிபிடித்தாற்போல குடிசைக்குள் பறக்கப்பழகலாயிற்று. எங்காவது வெளியேற வாய்ப்பிருக்கிறதா? என்றும் கவலைப்படத் தொடங்கியது. ஏமாற்றமே, கிடைத்தது. வழிதெரியவில்லை.

சமையற்கட்டில் ஏதோ உடையும் சப்தம் கேட்டது.

கிளி திடுக்கிட்டு நின்று பார்த்தது.
சமையற்கட்டிலிருந்து ஏதோ வெள்ளையாகஓடியது.
கிளி ஒரு கணம் தன்னை மறந்தது.
பசி. தாகம்.
பயத்தால் ஏற்பட்ட வரட்சி, களைப்பு.

பாலை நோக்கிப் பாய்ந்தது. பாலில் வாய் வைத்து நாலைந்து மிடறுகள் உள்ளே போயிருக்கவில்லை.

'மியாவ்!'

கிளி பயத்தால் உறைந்து போனது.

'எனது பாலைக் குடிக்காதே!'

''உனது பாலா? உரியவன் யாரோ?... என்னை இங்கே கொண்டு வந்தவன் சொத்தல்லவா? அதனால் எனக்கும் இதில் உரிமையுண்டு''

''ஓ!... நீ விருந்தினனல்ல; பங்காளியா?...''

''உந்தக் கதைகள் வேண்டாம். இருவருமே பேசிக் கலந்து பாலைப்பங்கு போடலாமே?... இதனால் பசிப் பிரச்சினைமட்டுமல்ல: பல்வேறு பிரச்சினைகளும் தீரும், பிரச்சினைகளும் உருவாகமாட்டா!...''— கிளி.

பூனை நக்கலாகக் கூறியது: ''உன்னோடு பேச்சு வார்த்தையா? சின்னதுகளோடு பேச்சு வார்த்தை நடாத்த எனக்கென்ன அவசியம் வந்தது?''

''அப்படியானால் என்னை வெளியே போகவிடுவாயா? நீ குடிலுக்கு வந்த வழியைக்காண்பி. நான் அந்த வழியே வெளியேறி விடுகிறேன் வெளியே எனக்கொரு பெருவாழ்வு காத்திருக்கிறது... நீயும் உன் பாலும் உனக்கே... உனக்கு மட்டுமே சொந்தமாக அநுபவிக்கலாம்....''

பூனை மீண்டும் சிரித்தது.

''உன்னை வெளியே விடுவதில் எவ்வளவு நஷ்டம் எனக்குத் தெரியுமா?...''

''எப்படி?...''

''நீ இங்கு வந்திருப்பதால் அவன் தான் வாங்கும் பாலைவிட அதிகம் வாங்குவான்... அந்தப் பாலையும், நானே திருடி விடுவேன்... அதுமட்டுமல்ல... எனக்குப் பறவைகளின்இறைச்சியும் பிடிக்கும்''— என்ற பூனையின் மீசை முகம் கிளியின் முன்னே விகாரமாக விரிந்தது. மீசை முட்கள் குத்தின.

கிளி அலறியது. அதனது ஓலம் வெளியே கேட்டது.

''என்னை ஒன்றும் செய்யாதே வெளியே விடு... உனக்குப் பழங்கள்... தானியங்கள் கொண்டு தருவேன்...''

''என்ன மீண்டும் என்னைப் பேச்சு வார்த்தைக்கு அழைக்கிறாயா?... மீண்டும் கேட்கிறேன்... உன்னோடு பேச்சுவார்த்தை நடாத்த எனக்கென்ன அவசியம்? நீ அடிமை... அடிமைகளைச் சிறையில் கொண்டாலும் உலகில் எந்த உயிரும் நாடும் கேட்கப்போவதில்லை. ஏனென்றால் அவர்களும் என்னைப் போன்றவர்களே...'' எனது செயலைக் கண்டிப்பதற்குப் பதிலாக வாழ்த்துவார்கள்... தங்களை உற்சாகப்படுத்துவதாக...''

''என் உரிமைகளைக்கொடு... என்னை விடு...''

''ஆ! உரிமை... நீ சாகும் உரிமை... சாகப்போகும் உன்குரலும் கூட இனிமையாகத் தானிருக்கிறது... பேசு... ஏதோ தருவதாகக் கூறினாயே அது என்ன?...''

''எனது சந்ததி பறம்பு மலை முற்றுகையிட்டிருந்த போது அங்கு வாழ்ந்த பாரிமன்னனுக்கும் அவன் குடிகளுக்கும் உணவு படைத்த இனம். உலகின் தனிப்பெரும் இனம்... எம்பெருமை புரியாது... எம் வரலாறு தெரியாது எம்மினத்தை கொன்றழிக்காதே...''

''பார்த்தாயா... பார்த்தாயா... உன் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்ததில் குடித்த பால் கூட செமிச்சு விட்டுது... இனி உன்னைக் கொல்வதே எனது தர்மம்... தின்பதே எனது தார்மீகம்...''— என்றவாறு கிளியின் மீது பாய்ந்தது. இதனை எதிர்பார்த்திருந்த இளங்கிளி;

-தொடரும்-

## ★ பதிந்த சுவடுகள் ★

கல்லூரி வாசலில் வந்த நிலா
கற்பனை நெஞ்சத்தை தந்த கனா
வல்லூறும் தேனாக இருந்த பலா - என்
வாசல் வரைதேடி வந்த நபா
சொல்லூறும் மருந்தாக இருந்ததடா
சோகமே என்வாழ்வு ஆனதடா
என்நாளும் நல்லாகச் சென்றதபா - இனி
அன்நாளும் என்வாழ்வில் போனதடா

(வேறு)

வெள்ளை உடையோடு
வீதிஎல்லாம் சுற்றி வந்து
கள்ளக் கதைபேசி
களிப்புற்றிருப்போம் நாம்
பள்ளிப் பருவமது
பாவையர் எமைப் பார்பதற்கு.
எதிர்கால நினைவுடனே
எதிர்கொள்வோம் பிரச்சினையை.
பழிகாரன் என்றெம்மை
பார் எல்லாம் தூற்றிடாமல்
சரியான வழியோடு
சாதித்தோம் எம் நினைவை.
கொள்ளை மனதினராய்
கோவிப்பார் எம்மீது
ஆசான் என்ற உறவோடு - எம்
ஆருயிரில் ஒன்றிவிட்டு
சிலபஸ்சை முடித்து வைத்து
கம்பஸிற்கு அனுப்பிவைப்பார்
பள்ளியில் இணைந்திட்டோம்
பரிதவிக்கிறோம் இன்நிலையில்
காலத்தின் தேவையினால்
கலைந்து செல்லும் எம் நட்பு
ஞாலத்தின் வடிவினால்
நாள் ஒன்று ஒன்றாவோம்
நன்மையிலும் தீமையிலும்
நாடித்திரிந்தோம் நாம்.
கொடியிற் பூத்திட்ட
முதற்பூவாம் எம் அன்பு
அந்தஸ்தும் ஜாதியும்
அருகி விட்ட எம் வாழ்வில்
நட்பிற்கும் காதலுக்கும்
நாம் எல்லாம் அடிபணிவோம்.

சசிகுமாரசர்மா



# சைவத் திருமுறைகள் பற்றிய நோக்கு

★ எஸ். அருள்நங்கை

புராதன காலந் தொட்டு தமிழ் மக்கள் சமய நம்பிக்கையுடையவர்களாகவே விளங்கினர். அம் மக்கள் தம் பக்தியினை வெளிப்படுத்துவதற்கு இறைவனைச் செந்தமிழால் பாடிப்பரவினர். சங்க காலம் தொடக்கம் இறைவனைத் துதித்துப் பாடும் வழக்கு இருந்தமையை அறியமுடிந்தது. சங்க காலத்திலிருந்து சோழர் காலம் ஈறாக சைவ மெய்யடியார்களால் பாடப்பட்ட பாடல்கள் சிலவற்றின் தொகுப்பையே சைவத் திருமுறைகள் என வழங்கும் வழக்குக் காணப்படுகிறது'

வேதங்கள் எழுதா மறை என்பது போல இத்திருமுறைகளை 'எழுதும் மறை' என வழங்குவர் ''எழுதுமறை மொழிந்த பிரான்'' என சேக்கிழார் சம்பந்தரைக் குறிப்பிட்டிருக்கக் காண முடிகிறது. ஏனெனில் திருமுறை வடிவப் படுத்தப்பட்டுள்ள இந்த இலக்கியங்கள் ஏடுகளில் எழுதி இவை சிதம்பரத்திலே வைக்கப்பட்டிருந்ததாகவும் சோழப் பெருமன்னர் ஆட்சிக் காலத்திலேயே திருமுறையாக வகுக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

இதில் உள்ளடக்கம் பெற்ற இலக்கியங்கள் ஒரே காலத்திற்குரியன அல்ல காதலுக்கும் போருக்கும் தமது வாழ்விலே முக்கியத்துவம் கொடுத்து வந்த சங்ககாலத்திலும் சிவ வழிபாடு பேணப்பட்டு சைவக் கருத்துக்களை விளங்கும் வகையிலே பாடல்கள் எழுந்தன. ஆனால் சங்கமருவிய காலத்திலேயே சைவநெறி மக்களால் கவரப்பட்ட பெருநெறியாக விளங்கியது என்பதனை காரைக்கால் அம்மையார் வாழ்க்கை நெறியுணர்த்தியது உலகியல் வாழ்வில் இருந்து கொண்டும் இறைவனையடைய முடியும் என தன் வாழ்க்கையால் நிருபித்த அம்மையார் தான் வாழ்ந்த காலத்தில் உருவாக்கிய இலக்கியங்கள் சைவபக்தி இலக்கியங்களிற்கு முன்னோடியாக விளங்கியது எனலாம் சங்கமருவிய காலத்தில் அம்மையாரைத் தொடர்ந்து சைவத்தை பக்தி இயக்க நெறிமுறையில் வளர்த்த நாயன்மார்களும் தாம் பெற்ற இறையனு பவங்களைபாடல்களாக்கி வெளிப்படுத்தினர். பக்தி இயக்க செயற்பாட்டினால் சோழராட்சியிலே சைவம் உச்ச நிலையை அடைந்தது. சிவநேயச் செல்வர்களாகிய சோழ மன்னர்கள் தம் ஆட்சியிலே சைவம் உயரிய நிலையை அடைய வேண்டும் என்கின்ற வேட்கை உடையவர்களாக விளங்கினர். இக்கால ஆட்சியாளர்களில் புகழுக்குரிய மன்னனாகிய இராஜராஜன் ஆட்சியிலே சைவம் உயர்நிலை பெற்றிருந்தமையை அவனால் கட்டி எழுப்பபப்பட்ட தஞ்சை பெருவுடையார் ஆலயம் உணாததி நிற்கின்றது. இத்தகைய மன்னன் சைவத்தை வளாத்த மெய்யடியார்களது பாடல்களை அழியவிடாது பாதுகாத்து என்றென்றும நிலைக்க வைத்து பக்தி உணர்வை என்றும் பசுமையாக்க வேண்டும் என்கின்ற நோக்கிலே அப்பாடல்களை ஒழுங்கமைத்து தர முன்வந்தான்.

இதற்காக திருநாரையூரிலே ஆதி சைவ குலத்தில் பிறந்து பொல்லாப் பிள்ளையாருக்குப் பூசை செய்து வரும் திருப்பணி பூண்டு ஒழுகியவரும் சைவப்பற்றும் சமய அறிவும் கொண்டு விளங்கிய நம்பியாண்டார் நம்பியை சைவபக்தி இலக்கியங்களை தொகுத்து வெளிப்படுத்த உதவுமாறு கேட்டுக் கொண்டார். இவரது வேண்டுகளின் படி நம்பியார் வகுப்பித்து வழங்கிய பக்தி இலக்கியத் தொகுப்பினையே திருமுறைகள் என வழங்குகின்றோம்.

சைவத் திருமுறைகளாக இன்று பன்னிரண்டு திருமுறைகள் குறிப்பிடப் படுகின்றன ஆனால் 11திருமுறைகளே நம்பியால் வகுக்கப்பட்டதாக அறியப்படுகின்றது. பின் 3ம் குலோத்துங்க சோழன் காலத்திலேயே 12ம், திருமுறை சேர்க்கப்பட்டதாக அறியப் படுகின்றது.

திருமுறைகளின் தொகுப்பு முறையானது பின்வரும் வகையிலே அமையப் பெற்று விளங்குகின்றது. 1ம் 2ம் 3ம் திருமுறைகள் சம்பந்தர் பாடியவை, 4ம் 5ம் 6ம் திருமுறைகள் அப்பர் பாடியவை 7ம் திருமுறை சுந்தரர் பாடியவை மேற் கூறப்பட்ட 7 திருமுறைகளிலும் உள்ளடக்கப்பட்ட பாடல்கள் தேவாரங்கள் என வழங்கப்படுகின்றன. இத் தேவார பதிகங்கள் 796ம் அடங்கிய திருமுறை அடங்கன் முறை என வழங்கப்படுகிறது.

8ம் திருமுறை மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் திருக்கோவையாரும் 9ம் திருமுறையிலே திருமாளிகைதேவர், சேந்தனார், கருவூர்தேவர், நம்பிகாடவர், கண்டராத்திரர், வேணாட்டடிகள், திருவாலியமுதர், புருடோத்தநம்பி, சேதிராயர் எனும் ஒன்பதின்மர் அருளிச் செய்த திருவிசைப்பா பதிகங்கள் 28ம் சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டும் அடங்கப் பெற்றுள்ளன.

சித்தர் முதல்வனாகிய திருமூலர் திருமந்திரம் 10ம் திருமுறையிலும் 11ம் திருமுறையிலே திருவாலவாயுடையார் பாடிய திருமுகப் பாசுரம் காரைக்கால் அம்மையார் அருளிய திருவாலங்காட்டு மூத்ததிருப் பதிகம், மூத்த திருப்பதிகம் அற்புத திருவந்தாதி திருவிரட்டை மணிமாலை என்பனவும் ஐய அடிகள் தந்த திருவெண்பா சேரமான் பெருமாள் நாயனார் ஆக்கிய பொன்வண்ணத் தந்தாதி திருவாரூர் மும்மணிக்கோவை திருக்கைலாச ஞானஉலா என்பனவும் நக்கீரர் ஆக்கிய கைலைபாதிகாளத்தி பாதி, திருலீங்கோய் மாலை எழுபது, திருவலஞ்சுளி மும்மணிகோவை, திருவெழக்கூற்றிகை, பெருந்தேவபாளி, கோபபிரசாதம், காரெட்டு, போற்

றிற் திருவகவல் திருமுருகாற்றுப்படை, திருக்கண்ணபப தேவா திருமறம் என்பவையும் கல்லாடர் தந்த திருக்கண்ணப்பதேவர் திருமறம் கபில தேவர் தந்த மூத்தநயனார் திருவிரடடை மணிமாலை, சிவபெருமான் திருவிரட்டைமணிமாலை சிவபெருமான் திருவந்தாதியும் பரணதேவர் வழங்கிய சிவபெருமான் திருவந்தாதி இளம் பெருமானடிகள் தந்த சிவபெருமான் திருமும்மணிக்கோவை அதிராவடிகள் வழங்கிய மூத்த பிள்ளையார் திருமும்மணிகோவை பட்டினத்தடிகள் தந்த கோயில் நான் மணிமாலை, திருக்கழுமலமும் மணிகோவை, திருவுடைமருதூர் மும்மணிக்கோவை திருவேகம்பமுடையார் திருவந்தாதி திருவொற்றியூர்தொகை எனபனவும் நம்பியாண்டார் நம்பி வழங்கிய பொலலாப்பிள்ளையார் திருவிரடடை மணிமாலை, கோயிற் திருப்பணியர் விருத்தம், திருத்தொண்டர் திருவந்தாதி ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி சண்பக விருத்தம் திருமும்மணிக்கோவை, திருகலம்பகம்திருத்தொகை திருவேகாதரமாலை எனப்படும் 12 சைவ மெய்யடியார்களால் பாடப்படட 40 பாசுரங்களை கொண்டது 11ம் திருமுறையாகும்.

இந்த பதினொரு திருமுறைகளிலே முதல 7 திருமுறைகளும நம்பியால் வகுக்கப்பட ஏனையவை பின்னர் சேர்க்கப்பட்டது, எனக் கூறுவாருமுளர் .பெரியபுராண ஆராய்ச்சி என்ற நூலில் Dr. மா. ராசமாணிக்கனார் இதற்கான பல ஆதாரங்களை முன்வைத்துள்ளார்.

ஆனால் 12ம் நூற்றாண்டுக்காலத்தில் அநபாய சோழன் முதன் மந்திரியாக விளங்கிய அருள் மொழித்தேவன் என்கின்ற சேக்கிழார் தொண்டர்கள் வரலாற்றை காப்பிய வடிவிலே வழங்கினார். திருத்தொண்டர் புராணம் மாக்கதை புராணம், பெரியபுராணம் என்று சுட்டப்படும் அடியவர்கள் வரலாற்றைக் கூறும் இவ்விலக்கியத்தை 12ம் திருமுறையில் சேர்த்துக் கொள்ளபட்டமை அறியப்படுவதனல் 11 திருமுறையும்நம்பியாண்டாரால்வகுக்கப்பட்டிருக்கலாம்என கருதுவோருமுளர். எது எங்கனமாயினும் சைவதிருமுறைகள் 12 என்றே இன்று கொள்ளப்படுகின்றது.

திருமுறை வகுக்கப்பட்ட பின்னர் திருமுறைப்பாடல் சைவமக்கள் மத்தியிலே சிறப்படையத் தொடங்கின எனலாம். எல்லாம் வல்ல இறைவனைக்கண்டு பேருவகையுற்று இசைத் தமிழால் அவன் பெருமை பாடி அவன் வழி பல அற்புதங்களை நிகழ்த்திய அருள்கண்டு களிப்புற்ற மன்னரும் மக்களும் அப்பாடல்களை தெய்வீகப் பொருளாகவும் அவற்றை இறைவனைப் போற்றும் அர்ச்சனை மாலையாகவும் அரண்மனை இல்லம், ஆலயம் தோறும் போற்றுவாராயினர் பல்லவர், சோழர் ஆட்சியிலே மன்னர்கள் ஆதரவோடு இவை ஆலயங்களிலே படிக்கப்பட்டன பல்லவர் ஆட்சியில் திருப்பதிகங்களை படிப்போர்க்கு மன்னன் இறையிலித் தானங்கள் வழங்கியதாக அறியப்படுகிறது. சோழர்கள் ஓதுவார்கள் திருப்பதிகம் விண்ணப்பம் செய்பவர்கள் என்ற பெயரிலே இப்பாடல்கள் பாடுபவர்களை கௌரவித்து தானங்கள் வழங்கியமை கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது. முதலாம் ராஜராஜ சோழன் தாம் அமைப்பித்த தஞ்சை கோவிலிலே திருமறை வழிபடடை சிறப்புறப்பேணிமூவர்திருவுருவங்களையும் ஆலயத்தில் எழுந்தருள வைத்தன் நம்பியாண்டார் நம்பியின் திருமுறை வகுப்பினை உள்ளத்துட் கொண்டு இயலிசை வல்லார் பலரும் ஒன்றுகூடி பண்பொருந்தப் பாடிஇறைவனை வழிபடுவதற்குரிய வழிதுறைகளை முதன்முதல் வகுத்த பெருமை இம் மன்னனுக்குரியது மன்னனை தொடர்ந்து பின் வந் அரசர்களும். பிரதானிகளும் திருமுறை வழிபாட்டை சிறப்பித்தனர்.

திருமுறைகள் இறைவனை புகழ்ந்து பாடும்பாவாக மாத்திரமன்றி தெய்வீகத் தன்மை உடையனவாக இருந்தமையால் திருமுறைகளை மன்னர்கள் பூசிக்கத் தொடங்கினர் அவ் வீடத்தினை திருக்கைகோட்டி என அழைத்தனர். ஆலங்களில் திருமுறைகளைபாதுகாத்தல், அவற்றிற்கு பூசையிடல், அழிந்தவற்றை புதுப்பித்தல், பாடுதல், பிறருக்குக் கற்பித்தல் முதலான பணிகளை ஆலயங்களில் மேற்கொண்டவர் தமிழ் விரகர்கள் என சோழர் காலத்தில் அழைக்கப்பட்டனர்- முதலாம ராசேந்திரன் இவர்களை கொண்டு தேவாரங்களை செப்பேடுகளில் எழுதிவித்ததாக அறியப்படுகின்றது.

இத் திருமுறைகள் பண் அமைத்துப்பாடும் சிறப்பு காணப்படுகின்றது. தமிழ் பண்கள் 103 என்பர். தேவாரத்தில் மட்டும் 23 பண்கள் இணைந்துள்ளதாக பண்பற்றி ஆராய்ந்தவர்கள் கூறுவர். தேவாரம் முதல் திருப்புகழ் ஈறாக யாவுமே பண் கொண்டு பாடப்படுவதைக் காண்கிறோம். இறைவனும் இசைப்பிரியனாய் தன்னை புகழ்ந்தேற்றும் அடியவர்கள் மூலம் அதனை வேண்டி நிற்பதனால் தான் ''இறைவன் ஏழிசையாய் இசைப்பயனாய் இருப்பவன்'' ''பண்ணும் அவனே பண்ணின் திறனும் அவனே'' என போற்றினர். தமிழோடு இசை பாடுவது சிறந்த புண்ணியம் என்பர் அப்பர் ஆதலால் திருமுறைகள் பண் சேர்க்கப்படடு பாடப்படும் தன்மையினை காணமுடிகிறது.

இன்றும் ஆகமக்கிரியைகள் செல்வாக்கு பெற்று விளங்கினாலும் கிரியையின் முடிவே பஞ்சபுராணம் என்ற பெயரில் திருமுறைகள் பண்ணுடன் ஓதப்படுவதை வழக்கமாக்கி கொண்டிருக்க காணமுடிகின்றது. திருமுறைகளே அன்றிலிருந்து இறையவரை இறை உணர்வை ஊட்டி வரும் அரும் பெரும் சாதனங்களாக விளங்குகின்றன எனலாம்.

★ **பச்சைநிறச் சூரியன்**


அந்தாட்டிக் கண்டத்தில் சூரியன் மறையும் போது, அப்போது அவ்வளிமண்டலத்தில் ஏற்படும் நிலைமையினால், சூரியன் பிரகாசமான பச்சை நிறமாகத் தோன்றும்

★ அரேபியாவில் தங்கநிறநாணயத்தை 'தினார்' என்றும், வெள்ளி நிற நாணயத்தை 'திர்ஹம்' என்றும் சொல்வார்கள் (இங்கே ரூபா, சதம் போல்) அவற்றின் தமிழ் விளக்கம் யாதெனில்

தினார் என்றால் - நரக நெருப்பு,

திர்ஹம் என்றால் - துன்பத்தின் வாசல் என்பதாகும்.

# கற்பெனப்படுவது ......!



அவளிற்கு 'திக்' என்றது. அவனின் கேள்வியை கேட்டு கட்டிலணைத்துக்கொண்டு படுத்திருந்த கமலகரனின் முகத்தை உற்றுப் பார்த்தாள் நதியா. இவனின் இந்தக்கேள்வி எதன் விளைவு? சந்தேகமா? பொறாமையா? அல்லது இரக்கமா? முகத்தில்கவலைதான் தெரிந்தது திரும்பவும் அவன் "எத்தனை தடவைஅவன்ரவீட்ட போனாய் என்றான். "பலதடவை"

அமைதியாக கண்ணை மூடியபடி கிடந்தான். இப்பவே இப்படி கேள்வி கேட்டு துளைக்கிறேனே அவளிடம் எதிர் காலத்தில் எப்படி நடந்து கொள்வேன். என்ற கேள்வி வந்தது. நெற்றி சுருக்கி புருவ இடை நோக்கி யோசித்தான். அவள் விட்டம் பார்த்து பழைய வேதனைகளை இரை மீட்டுவதை அவளின் வேதனை நிறைந்த தாடை இறுகிய முகம் காட்டிற்று.

"தனிய இருக்கிற ஆணோட அவனின் வீட்டிற்கு நீ போனியா?" "காதலிக்கிறதா சொன்னான். வீட்டுக்காரரோட அன்பா பழகினான் நம்பிப் போனன்"

காதல்- காதல் பற்றிய ஆரம்ப அறிவே இல்லாத பதின்மூன்று வயதுப் பெண் இருபத்தைந்து வயது ஆணின் வார்த்தை கேட்டு நெகிழ்ந்திருக்கிறது- அந்த நெகிழ்வை அவன் பயன்படுத்திக் கொண்டான். இவள் சிதைந்தாள். ஊர் கை கொட்டி சிரித்தது- இவளை தூற்றிற்று. அவனை மறந்து போயிற்று- இதுதான் உலகம். பெண்ணை வதைக்கும்- கற்போடு இரு என்று கட்டளை போடும். ஆண் எப்படி வாழ்ந்தாலும் ஆண் பிள்ளை என்று கூறும்- பெண்ணை அடங்கி இரு என்று மிரட்டும்- மரபை உடைப்பவளை "ஆட்டக்காரி" என பழிக்கும். ஒதுக்கி வைக்கும்- நதியாவிற்கு இப்போ இருபது வயது,

காதலையறியாப் பெண் ஆணின் வார்த்தையில் மயங்குகிறாள். காதலென்பது களவா? காமமா? உடம்பு சம்பந்தப்பட்டதா? அல்ல அல்ல மனசு சம்பந்தப்பட்டது. ஒன்றிற்காக ஒன்றை இழத்தல்- விட்டுக் கொடுத்தல், இந்த தேசத்து வாலிப மனசுகள் இதை மறந்து போகின்றன. அழகில் மயங்கி வார்த்தையில் நெகிழ்ந்து சீரழிந்து போகின்றன.

திடீரென விசும்பத் தொடங்கினாள் நதியா. "நான் கெட்டுப் போயிற்றேன். நான் கெட்டுப் போனேன்........."

அழுகையூடு வருகின்ற அவளின் வார்த்தையில் இவைமட்டுமே விளங்கிற்று- மௌனமாய் முதுகில் தட்டிக்கொடுத்தான் கமலகரன் அழட்டும், அழுது முடிய தெளிவு வரும் அந்த தெளிவு அமைதி தரும், உறுதி தரும்.

"நான் கெட்டுப் போனேனா" என்று அவனை கேட்டாள். இங்கேதான் சிக்கல் ஏற்படுகிறது. பெண் பேதமைக்கிறாள் அறியாமை அவளை மயக்கும் நுண்ணறிவுள்ள நூல் பலவொடு பழகினாலும் பெண்ணறிவென்பது பேதமைத்து என்பது நிஜமாயிற்று. பெண் தன்னை பேதையாக்குகிறாள், நதியாவும் பேதமைத்தான்.

" யாரு சொன்னா நீ கெட்டவ எண்டு"

"எல்லாரும் சொன்னாங்க ஊர் முழுக்கதூற்றிற்றே"

"யாரு நீ கெட்டவ எண்டு சொல்லக் கூடாது"

"நீங்கதான்"

" தான் சொன்னேனா? அல்லது சந்தேகப்பட்டேனா?

"சொல்லல- சந்தேகப் பட்டதாகவும் தெரியல"

"பேந்தென்ன கவலை அமைதியாய் சந்தோஷமாய் இரு -நான் உனக்கு துணையாக இருப்பேன்."

அவள் அதிசயமானாள் எப்படி இவ்வளவு "ரேக்கிற் ஈசி"யாக இவனால் எடுக்க முடிகிறது.

" எப்படி நான் கெட்டுபோகல எண்டு சொல்றீங்க"

ஒருவன் வந்து உடுப்பு கேட்டா குடுப்பியா ?

ஆமாம், குடுப்பேன்-

உணவு காசு என்ன கேட்டாலும் குடுக்கிறனிதானே-

ஆமா. அதுக்கென்ன?

அதுபோல உடம்பைக் கேட்டான் குடுத்தா அதிலென்ன குற்றம்.

திகைத்துப் போனாள் உடம்பும் உடையும் ஒன்றா! புஸ்தகமும் பணமும் ஒன்றா என்ற கேள்வி புத்திக்குள் ஓடி வாய் வழியாக வந்தது.

உடம்பு, புஸ்தகம் இன்னும் இங்கு இருக்கிறதெல்லாம்

★ கமலதாஸன் ★

அழியும், என்றோ அழியும் அது சத்தியம் எல்லாம் சடம், சடமெல்லாம் அழியும், தொலையும், உயிர் மட்டுமே இங்கு இருக்கும்- இறுதியிருப்பு அது மட்டுமே நிஜம் மீதி தொலைந்து இழிந்து போம்.

"எந்த ஆணும் எந்தப் பெண்ணுடனும்........."

"அங்கேதான் தவறுகிறாய்" நிஜங்களை ஏற்பதில் மனிதன் தயங்குகிறான். பல குதர்க்கமான வினாக்களை எழுப்புகிறான். தவறு நிகழ்ந்து விட்டது- நடந்த தவறு இனி நடக்காமல் இருக்கட்டும். வாழ்வின் படிக்கல் ஆகட்டும்- தவறு விடுவது மனித இயல்பு. அத்தவறை திரும்ப செய்வது தான் பாவம்- மன்னிக்க முடியாத குற்றம்.

அப்ப கற்பு பெரிதில்லையா? கற்பெனப்படுவது என்று கற்புக்கு வரைவிலக்கணம் கூட மூதாதையர் சொன்னார்களே! கற்பு ஆணிற்கும் பெண்ணிற்கும் பொது. எந்த

ஒரு பெண்ணையும் கற்பனையில் கூட கற்பழிக்காத ஆண் கிடையாது. கண்சிமிட்டாத பெண் கிடையாது யதார்த்தம் இவ்வாறிருக்க இல்லாத ஒன்றை உருவாக்கி அதை மனிதன் மேல் செலுத்த முற்பட்டமை பேதமையே!

கற்பு தேவையில்லையா?

தேவை. அது மனிதனுக்கு, அணிகலனாக இருக்கும் வரை அது மனிதனுக்கு, விலங்காயின் அது ஒழியட்டும்- மனிதனை அழிப்பின் அது அழியட்டும்- மரபு உடையட்டும் அவளின் மனதில் திகைப்பு நீங்கி வியப்பு உண்டாயிற்று அவள் சிந்திக்கத் தொடங்கினாள்.

# ஈழத்துத் தமிழ்க் கவிதை வரலாற்றில் சமூக சிந்தனை உருவாக்கம்

“கவிதை என்றவுடன் பாட்டு என்ற வடிவ நிலையுடன் தொடர்புபடுத்தி அதைச் சிந்திப்பதே பெரு வழக்கு. பாட்டு வடிவில் அமையாத நிலையிற் கவிதைகளாகக் கருதப்படுவனவற்றை வசனக்கவிதை புதுக்கவிதை என்பனவாக அடைபுணர்த்தி வழங்குவது சமகால மரபு கவி என்ற வடசொல்லினின்றும் பிறந்த கவிதை என்பது கவிஞனால் ஆக்கப்பட்டது. என்ற பொருளைத் தருவது சங்கத் தமிழ் மரபிலே இச்சொல் வழக்கில் இருந்தமைக்குச் சான்றில்லை செய்யுள் என்ற சொல்லே மொழி சார்ந்த ஆக்கம் பலவற்றுக்குமான பொதுச் சுட்டாகத் திகழ்ந்தது. ஏறத்தாழப் பத்தாம் நூற்றாண்டை அடுத்துச் செய்யுள் என்ற சொல் பாட்டு வடிவத்தை மட்டும் சுட்டுவதாகப் பெரு வழக்குப் பெறலாயிற்று.” என்ற கலாநிதி நா. சுப்பிரமணியன் அவர்களுடைய கவிதைத்தோற்ற வரலாறு பற்றிய கருத்துக் குறிப்பிடத்தக்கதாகும்.

ஈழத்துத் தமிழ்க் கவிதைகளில் சமூக சிந்தனை உருவாவதற்கான வரலாற்றினை ஆராயமுன் ஈழத்துத் தமிழ்க் கவிதைகளின் தோற்றம் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடப்பட வேண்டும். ஈழத்துத் தமிழ்க் கவிதை தொடர்பாகச் சிந்திக்கும் போது முதலிற் கவனத்துக்கு வருபவர் சங்கப் புலவராகிய ஈழத்துப் பூதந்தேவனார் ஆவார். ஈழத்துப் பூதந்தேவனார், மதுரை ஈழத்துப் பூதந்தேவனார் என்னும் பெயர்களில் வழங்கியவர் பாடியனவாகச் சங்கத்தொகை நூல்களான நற்றிணையில் 366, குறுந்தொகையில் 189 343 360 அகநானூறு 88 231 307 எல்லாமாக ஏழு பாடல்கள் உள்ளன. மகாவித்துவான் சி. கணேசையரின் 'ஈழநாட்டு தமிழ்ப் புலவர் சரித்திரத்தில்' இப் பூதந்தேவனாரை முன்வைத்தே வரலாறு தொடங்குகின்றது பின்னர் ஈழத்துத்தமிழ்க் கவிதைக் களஞ்சியத்தை' தொகுத்த (1966) கலாநிதி ஆ. சதாசிவம் அவர்களும் இவரை முன்வைத்தே தொகுப்பு முயற்சியை மேற்கொண்டார். வித்துவான் F. X. C. நடராசா அவர்களது ஈழத்துத் தமிழ் நூல்வரலாறு நூலும் இவரை முன்வைத்தே வரலாற்றை ஆரம்பிக்கின்றது. எனினும் இவரை முன்வைத்து ஈழத்து இலக்கிய வரலாற்றைத் தொடங்கலாமா என்பது தொடர்பாக ஆய்வாளரிடையே தயக்கமும் நிலவுகிறது. பேராசிரியர். பொ. பூலோகசிங்கம் அவர்களும் கலாநிதி. க செ. நடராசா அவர்களும் ஈழத்துப் பூதந்தேவனார் என்ற தொடரில் அமைந்த 'ஈழம்' என்ற அடை இலங்கை நாட்டைத் தான் குறித்தது என்பதிற்கு போதிய ஆதாரங்கள் இல்லை என்பர். நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு மலர் (1974 பக் 70) ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி 1982. பக்-3 மேலும் மேற்படி மூன்று பெயர்களிலும் வழங்கிய பூதந்தேவனார் ஒருவரே எனக் கொள்வதற்கும் சான்றுகள் இல்லை என்பது பூலோகசிங்கம் அவர்களுடைய கருத்தாகும் இத்தகைய தயக்கங்களை பேராசிரியர். ஆ வேலுப்பிள்ளை அவர்கள் நீக்கியுள்ளார். ஈழம் என்ற சொல் சங்க காலத்திலும் இலங்கையைக் குறிப்பதாகவே வழங்கி வந்துள்ளமையை மொழியியல், சாசனவியல் சான்றுகளின் துணைக் கொண்டு விளக்கிய அவர் ஈழத்துப் பூதந்தேவனாரை இலங்கைப் புலவராகக் கொள்வதில் தயக்கம் ஏற்படுவதற்கே இடமில்லை என்ற கருத்தைப் புலப்படுத்தினார். மேலும் மூன்று பெயர்களாலும் சுட்டப்பட்டவர் ஒருவரே என்பதனை அவர் அகச் சான்றுகளை ஒப்பியல் இலக்கிய நோக்கில் அணுகித் தெளிவுபடுத்தினார். Inauguarl- Lecture தொடக்ககால ஈழத்து இலக்கியங்களும் அவற்றின் வரலாற்றுப் பின்னணியும் 1986 (பக் 8-14) எனவே சங்க காலத்தவரான ஈழத்துப் பூதந்தேவனாரை முதல்வராகக் கொண்டு ஈழத்துக் கவிதை வரலாற்றைத் தொடங்குவதற்கு எந்தத் தடையும் இல்லை என்பர் கலாநிதி நா. சுப்பிரமணியன் அவர்கள் . ஆகவே ஈழத்துத் தமிழ்க் கவிதை வரலாறு ஈழத்துப் பூதந்தேவனாருடனேயே தோற்றம் பெறுகின்றது

**பொன். அநந்தவநாதன்**
விரிவுரையாளர்,
யாழ்ப்பாணக்கல்லூரி.

ஈழத்துப் பூதந்தேவனார் காலம் முதல் கி.பி 12ம் நூற்றாண்டு வரை உள்ள காலப்பகுதி ஈழத்துத்தமிழ் இலக்கிய வரலாற்றில் இருண்டகாலப் பகுதி என்பர் சி. தில்லைநாதன். நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சிமாநாட்டுமலர் .(1974.பக்-78) இலக்கிய வரலாற்றிலே காணப்படும் இந்தப் பாரிய இடைவெளியைக் கொண்டு அக்காலப் பகுதியிலே இலக்கிய முயற்சிகள் நிகழவில்லை என்ற முடிவுகளுக்கு நாம் வர முடியாது. ஈழத்தின் பல்வேறு பிரதேசங்களிலே தமிழ் மக்கள் பண்பாட்டு வளத்தோடு வாழ்ந்து வந்தனர் எனக் கொள்வதற்கு வரலாற்றுச் சான்றுகள் உண்டு தமிழகத்திற்கும் ஈழத்திற்கும் அரசியல், வாணிபம், சமயம் முதலிய துறைகளில் நெருக்கமான உறவுகள் நிலவிய அக்காலப் பகுதி

யின் அந்நாட்டு இலக்கிய வரலாற்றுப் போக்குடன் ஒட்டி ஈழத்திலும் தமிழிலக்கியங்கள் படைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதுவதற்கு தடையில்லை. ஆனால் அவை உரிய வகையிற் பேணப்படாததாலோ அல்லது இற்றை வரையான ஆய்வில் வெளிக்கொணரப்படாததாலோ எமக்குக் கிடைக்கவில்லை என்றே கருத வேண்டியுள்ளது. இக்காலப் பகுதியில் தமிழிலக்கிய முயற்சிகள் நிசழ்ந்தன என நாம் கருதுவதற்குத் துணை செய்யக் கூடியவகையில் சாசனங்களில் இருந்து நான்கு பாடல்கள் சாசனவியல் ஆய்வாளர்களால் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அவை அனுராதபுரம், பதவியா, பண்டுவஸ்நுவர, கோட்டகம ஆகிய பிரதேசங்களிற் கண்டறியப்பட்டவை. இவற்றின் காலம் கி. பி 9ம் நூற்றாண்டு முதல் 14ம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதி என்று கொள்ளப்படுகின்றன என்பர் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை அவர்கள்.

(தொடரும்)



# தொண்டர் தம்பெருமை

1

**● தாவை. லோ. துஷிகரன் ●**

இறைவனுடைய பெருமையைக் கண்ட எமது தொன்மை வரலாறு இப்போது அச்சுறுத்தலான நிலைக்குத் தள்ளப்படுமா என்ற வினா எழக் கூடிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. பக்தியின் உச்சத்தில் திளைத்தவர்களுக்கு நாம் உரிய இடத்தை வழங்குவதைத் தவிர்க்கிறோம். இதை நாம் அறிந்தோ அறியாமலோ செய்கிறோம். ஏன்?, எமது இளந்தலைமுறையில் ஒரு பிரிவினர் இறை நம்பிக்கையிலும், அதன் சுவையிலும், இறை விழாக்களிலும் நின்று விலகுவதோடு, அதைச் சந்தேகக் கண்களோடு பார்ப்பதும் தெரிகின்றது. இதை மனங் கொண்டதாக இந்தப் பக்தி இலக்கிய கட்டுரை அமைகிறது.

சுட்ட பழம் வேண்டுமா, சுடாத பழம் வேண்டுமா எனக் குமரன் ஔவையிடம் கேட்டது நாம் எல்லோரும் அறிந்தது. கருங்காலிக் கட்டைக்கு நாணாக் கோடாரி இருங் கதலித் தண்டிற்கு நாணுவது போல, தான் இச்சிறுபையனிற்கு தோற்றத்தைக் கண்டு வெட்கப்பட்ட ஔவை, ஈரிரவு துஞ்சாது என் கண் என கூறியவள் அப்போது தன் கண் முன்னே பையனை இறைவனாகக் கண்டார். குமரன் ஔவையிடன் கொடியது எது. இனியது எது. அரியது எது எனக் கேட்டவற்றிற்கு விடை கூறியவள் பின் பெரியது எது என்று கூறுகின்றாள்.

வேலவனே, பெரியது கேட்கிறாயா? இந்தப் புவனம் பெரிது என்று சொல்கிறார்களே இந்தப் புவனம் நான்முகனின் படைப்புத் தானப்பனே. இந்த நான்முகனோ திருமாலுடைய வயிற்றிலிருந்து தோன்றியவன். அலைகள் புரண்டு ஆர்ப்பெரித்தெழும் திருப்பால்க்கடலிலே பள்ளி கொள்பவன் தான் இந்தப் பரந்தாமன். இப்படியான பாற்கடல் குறுமுனியினுடைய உள்ளங்கையிலே ஒடுங்கிப்போய் இருக்கிறது. ஆனால் குறுமுனி கும்பத்தில் இருந்து தோன்றியவன். புவியிலுள்ள சிறிதளவு மண்ணினால் ஆக்கப்பட்டது தான் இந்தக் கும்பம். புவி ஆதிசேடனின் ஒரு தலைக்குத்தான் பாரம் ஆனால் இந்த ஆதிசேடனை உமை தனது சிறுவிரலிலே மோதிரமாக அணிந்திருக்கின்றாள் எனினும் உமையவள் இறைவனுடைய இடது பாகத்திலே ஒடுங்கிப்போய் இருக்கின்றாள் எனவே இறைவன் இவ்வளவற்றையும் அடக்கியவன். இறைவனை அடக்கியவனாகக் காட்டிய ஔவை அடுத்த இடம் அடங்கியவனாகக் காட்டுகிறாள். எங்கே?

''இறைவரோ
தொண்டர் உள்ளத்தொடுக்கம்''

உள்ளத்தில் உண்மையொளி கொண்ட தொண்டருடைய உள்ளத்திலே ஒடுங்கினான் இறைவன் எனக் கூறி.

''தொண்டர் தம் பெருமை
சொல்லவும் பெரிதே''

என்று வியக்கின்றாள்.

''உள்ளம் பெருங் கோயில்'' என்பார்கள் பெரியவர்கள். உள்ளத்திலே இறைவனை இருத்தி வழிபடும் வழிபாடு தான் பெரியது. கற்கோயிலிலும் பார்க்க மனக்கோயிலில் விருப்புக் கொண்டவன் தான் இறைவன்... அது பூசலார் வாழ்க்கை தந்த பாடம். இந்த இரண்டு கோயிலிலும் இறைவன் எழுந்தருளி இருந்தாலும் உள்ளக்கோயிலில இருக்கும எம்பெருமானைத் தானே நாம எபபோதும காணலாம, உணரலாம், கண்டு ஆன்புறலாம இறைவனைக் காணவிழைந்த நாவுக்கரசர்,

'கணகாள காண்மின்களோ,
கடல் நஞ்சுண்ட கண்டன்றனை
எண்டோள் வீசி நின்றாடும்
பிரான்றன்னைக்
கண்கள் காண்பனகளோ......''

என்று ஆனந்தம், ஆனந்தம் பாடுகிறார். இபபடிபபாடியவர் திருவங்கமாலை முடிவிலே தான் இறைவனைக் கண்டு பிடித்தார். எங்கே?

''தேடிக் கண்டு கொண்டேன்
திருமாலோடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை
என்னுள்ளே தேடிக்கண்டு
கொண்டேன்''

என்று மனம் ஆசையில் ஊஞ்சலிலாடுகின்றார்

''கோ'' என்று சொல்லப்படும் தலைவனாகிய இறைவனது இல்லம் தான் இந்தக் கோவில். அந்த இறை இல்லம் எமது உடம்பாக இருக்கு

மென்றால் எதற்கும் இல்லாத சிறப்பு எமது ஊனுடம்பிற்கு உண்டாகுமல்லவா, தம்மை பிறர் இலயிப்பதற்காக எத்தனை பேர், எத்தனை அலங்காரம் செய்கிறார்கள். இந்த வெறும். வெளியலங்காரங்கள் தேவையில்லை எம்முள் இறைவனை இருத்தி உள் அலங்காரம் மேற்கொண்டு உடம்பைக் கோயிலாக்க வேண்டியது தான், அப்போது ஆன்மாக்கள் நல்லமுறைகளில் இலயிக்கும், ஆன்மாக்கள் இலயிக்கும் இடம்தானே ஆலயம். எனவே எமது உடம்பு ஆலயமாகட்டும். ஆலயம் பற்றிக் கூறும் நற்றமிழால் இசை பாடிய ஞானசம்பந்தர்.

''தொண்டர் ஐந்து களிறுமடக்கிச்
சுரும்பார் மலர் இண்டை கட்டி
வழிபாடு செய்யுமிடம்''

என்றார்.

உள்ளத்தை அள்ளித்தா என்று கேட்கிறார்கள் தான் தமது உள்ளத்தை பலபேர் பறிகொடுத்தும் உள்ளார்கள் தான். ''......... என் இதயத்தை தொலைத்து விட்டேன்'', என்று பாடும் இன்றைய திரையுலகக் கவிஞர்களுக்கு, தொலைத்த இடத்தின் முகவரி கூடத் தெரியவில்லை. பின் காலடி கூடத்தேடிப் போகிறார்கள். இப்படி உள்ளத்தை தொலைத்து, அலைந்து, வெறும் அவஸ்தை என்று பின்னர் உணர்வது காலங்கடந்த ஞானம்தான். ஆனால் அன்று பாடியவர்களும் உள்ளத்தைப் பறி கொடுத்தார்கள், காலடி தேடிப் போனார்கள். அவஸ்தைப்படுவதற்கு மாறாக பேரின்பம் கண்டார்கள். அவர்கள் யார்? எங்கே எப்படி? இன்பங்கண்டார்கள்! என்பது அடுத்த இதழில் .(வளரும்)

# சென்-உள ஒடுக்கமும் கலை இலக்கியங்களும்

வலிமை கொண்ட யப்பானிய நிலப் பிரபுத்துவ சமூகக் கட்டமைப்பில் உள அமைதி தேடிய மனித மன வெழுச்சிகளுக்கு சென் உள ஒடுக்கம் ஆழ்ந்த வழியைக் காட்டியது. 'சான்' என்ற சீனமொழிச் சொல் 'சென்' என யப்பானிய மொழியில் வழங்கப்படலாயிற்று. இந்திய மரபின் 'தியானம்' என்பது சீன மொழியில் 'சான்' என வந்ததாகக் குறிப்பிடுவர். அது போதி தர்மரின் வழியாக் சீனாவில் பரவலாயிற்று.

சென் — உள ஒடுக்கம் யப்பானிய கலை இலக்கியங்களில் மட்டுமல்ல வீடுகளின் உள் அலங்காரம், மலர் அலங்காரம், வீட்டுத்தோட்டம், கல்விச் செயற்பாடுகள், போன்ற பல்வேறு துறைகளிலே செல்வாக்குகளை ஏற்படுத்தியது மட்டுமன்றி, நவீன உலகின் கலை இலக்கிய விசைகளிலே தனித்துவத்தையும் வருவித்துள்ளது. சென் வாழ்க்கை முறையானது ஒருவரது நடத்தையிலே தனித்துவத்தையும் அவரது முயற்சியினால் கூடிய விளைவுகளையும் ஏற்படுத்த வல்லது] என்று கொள்ளப்படுகின்றது.

யப்பானிய ''கைகூ'' கவிதை அருவிக்கு சென் உள ஒடுக்கம் விசையாகவும் பின் புலமாகவும் அமைகின்றது. விரிவாகநோக்கும் பொழுது, சென் உள ஒடுக்கம் பின்வரும் ஊடுபண்புகளைக் கொண்டது.

(1) நாளாந்த செயல்களிலும் பொருள்களிலும் வாழ்க்கையின் யதார்த்தம் தெளிவாகத் துலங்கும்.

(2) ஒவ்வொரு பொருளும் தனது இயல்புக்கு ஏற்றவாறு இருப்புக் கொள்ளும். பொருள்கள் மீது கொள்ளப்படும் புலக்காட்சி புறமிருந்து வருவதில்லை — அகத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(3) ஒவ்வொரு பொருளும் மற்றைய பொருள்களின் தொடர்பினால் இருப்புக் கொள்கின்றது.

(4) சுயமும், அகிலமும் வேறுபட்டவை அல்ல. அவை ஒரு முழுமையின் தொழிற்பாடுகளாகும்.

(5) இயற்கையிலிருந்து மனிதன் தோன்றுகின்றான் இயற்கையைக் கட்டுப் படுத்துவதிலும் பார்க்க இயற்கையோடு இசைந்து வாழ்வதனால் மட்டுமே மனித செயற்பாடுகள் வினைத்திறன் அடையும்.

(6) மனித உடலில் நிலைகொண்ட ஆளுமை தற்காலிகமானதாக அமைகின்றது.

(7) ஒருவனது முழுமையான இயல்பில் இருந்தே புலக்காட்சி முகிழ்த்தெழுகின்றது.

(8) வெற்றிடத்திலிருந்தே வடிவங்கள் முகிழ்த்தெழுகின்றன. ஒருவர் தம்மை வெற்றிடமாக்கும் பொழுது புத்தூக்கத்துடன் செயற்பட முடியும். தனித்துவமான கருத்துருவங்கள் அங்கே துலங்கும்

★ கலாநிதி சபா. ஜெயராசா ★

(9) ஒருவர் பார்வையாளராகவும், பங்குபற்றுநராகவும் ஏககாலத்திலே தொழிற்படும் பொழுது அவரின் ஆற்றுகை பாதிக்கப்படும்.

(10) அறிந்து கொள்ளமுடியா நிலையில் முகிழ்த்தெழும் பாதுகாப்பு, குலைவே பிரபஞ்சத்தின் மீது சாந்தம்மிகு நம்பிக்கையை ஏற்படுத்தும்.

(11) நிகழும் இக்கணத்தில் மட்டுமே ஒருவர் வாழ முடியும்.

(12) வாழ்க்கைச் செயல்முறையும் அதனோடு இணைந்த மொழியும், சொற்களும் ஒரே பெறுமானங்களைக் கொண்டவையாக இருக்கமாட்டா.

(13) பேசவும் தீர்மானிக்கவும் முடியாத உளத்தளத்

தில் ஒருவர் செயற்படும் பொழுது, சிரிப்பதைத் தவிர வேறொன்றும் தோன்றாது.

(14) சென் கலைப்பாங்கு என்பது வாழ்க்கை பற்றிய அறிவுடனும், சுய அனுபவங்களுடனும், ஆக்கச் செயல்முறை கட்டமைப்புடனும் ஒன்றிணைந்து கலந்து பண்பு நிடில ஒங்கலுடன் மேற்கிளம்பி வருகின்றது.

(15) உலகுடன் ஒவ்வொருவரும் தனித்துவமான இடைவினைகளை ஏற்படுத்துவதால், தனித்துவ மேம்பாட்டுடன் ஒவ்வொருவரதும் ஆக்கங்கள் மலர்ச்சி அடையும்.

மேற்கூறிய ஊடு பண்புகளை விளக்குகின்ற கலைப் படைப்புக்கள் பல தோன்றியுள்ளன. எடுத்துக் காட்டாகப் பின்வரும் கைகூ கவிதையைக் குறிப்பிடலாம்.

வயல்களும் மலைகளும்
கவிந்திடும் பனியால்
வாரியெடுத்துச் செல்லப்பட்டன.
எஞ்சிய உருவம் எதுமேயில்லை —

அனைத்தும் வெண்மையால்மூடப்பட்டுள்ளனதனித்தனி வடிவங்கள் மறைக்கப்பட்டுள்ளன அல்லது செப்பமாக்கப் பட்டுள்ளன. ஒருவித வெற்று நிலை அங்கு உணர்த்தப் படுகின்றது. வெற்று நிலையே முழுமை நிலை. வெற்று நிலையே அனைத்து வடிவங்களுக்கும் கருவாக அமைகின்றது. பனிப்போர்வையின் கீழ் எத்தனை எத்தனையோ வடிவங்கள்- ஒவ்வொரு வடிவங்களும் தத்தமது இயல்புக்கும் இயற்கை விதிகளுக்கும் ஏற்ப வரைவுள்ளன.

வரலாற்றுச் சந்தர்ப்பங்கள் யப்பான் நாட்டை தீவிர கைத்தொழில் நாடாக மாற்றியமைத்த நிகழ்ச்சிகள் தனி மனிதனை இடர்களைப் பன்முகப்படுத்திய நிலையில் சென் உள ஒடுக்கத்தின் சமூகத்தேவை மேலும் மீள வலியுறுத்தப்படுகின்றது. இந்நிலையில் கலை இலக்கியங்களில் அது தொடர்ந்தும் வலிமையூட்டும் சாதனமாகவே இருக்கின்றது. சுய நம்பிக்கை, தனித்துவ மேம்பாடு, வாழ்க்கை அனுபவங்களை ஆக்க வடிவங்களாக நிலைமாற்றுதல், உள்ளத்தில் ஆழ்ந்து குடிகொண்ட மறை வடிவங்களுக்கு உயிர்ப்புத்தருதல் முதலியவை தூண்டப்படுகின்றது. ஞானச் சொற்கள் ஒவ்வொருவருக்குமுரியவை - ஒவ்வொருவரும் தத்தமது ஆழ்ந்த அநுபவங்களின் வழியாக அந்தச் சொற்களுக்குக் கருத்து வழங்கவேண்டும். ஒவ்வொருவரும் தத்தமக்குள் ஒளியேற்றிக் கொள்ள வேண்டும். அதிர்ச்சியின் வாயிலாக தமது மாணவர்க்கு சென் உள ஒடுக்க ஆசிரியர்கள் ஞானத்தை வழங்குவர்.

தீவிர பொருளுற்பத்தி நடவடிக்கைகளிலும், இலாப மீட்டலிலும், மூலதனக் குவிப்பிலும் ஈடுபட்டுள்ள யப்பானிய சமூகத்திலே சென் உள ஒடுக்கம் இலாபமீட்டாத சாந்தி நிலைக்கு அழைத்துச் செல்கின்றது. சமூக முரண்பாடுகள் தனிமனிதரிடத்தே உள முரண்பாடுகளை ஏற்படுத்துகின்றன. சமூக முரண்பாடுகளையும் நெருக்குவாரங்களையும் தீர்ப்பதற்கு பரந்துபட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், ஆனால் உள ஒடுக்க முறை ஒரு வகையிலே ஒதுங்குதலாக இருந்தாலும் உள நலத்தையும் நெருக்குவார விடுவிப்பையும் ஏற்படுத்துகின்றது. இவ்வகை உபாயம், கலை இலக்கியங்களிலும் தனிமனித வாழ்க்கையிலும் மேற்கொள்ளப்படுதல் ''உள்ளொளியம்', என்ற எண்ணக்கருவாற் குறிப்பிடப்படும்.



## குறளில் அறிவுடமை

நாம் கடலைப் பார்க்கிறோம். ஒரு கடல் நீலமாகத் தெரிகிறது. இன்னொரு கடல் பச்சையாகத் தெரிகிறது. சில கடலில் ஒரு இடம் நீலமாகவும், ஒரு இடம் பச்சையாகவும் தெரிகிறது. ஏன் இந்த மாற்றம்? ஆழமான இடத்து நீர் நீலமாகவும், ஆழம் குறைந்த இடத்து நீர் பச்சையாகவும், கரைகளைத் தழுவும் அலை நீர் வெள்ளை வெளேரென்ற நுரை போன்றும் காட்சி தரும். இதனை அள்ளி எடுத்தால் நிறமே தெரியாது. இது தான் உண்மை. நீருக்கு நிறமே இல்லை. இதைக் கண்டு பிடிப்பதே ஆராச்சியின் அறிவு இதைக்கண்ட வள்ளுவர்.

''எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்பொருள் காண்பது அறிவு''

என்றார் போலும். அதாவது எத்தகைய பொருளைக் குறித்தும், எவர் எவர் வழியாக கேள்விப்பட்டாலும். அப்பொருள்களுள் மெய்ப்பொருளை எண்ணிக் காண்பதே அறிவு.

## ★ மிகப்பெரிய முத்து

உலகில் மிகப்பெரிய முத்து 1990ம் ஆண்டு, மேமாதம், 4ம் திகதி அமெரிக்காவில் ஏலத்தில் விடப்பட்டது. இது 6340g நிறை உடையது. 2500 ஆண்டுகளுக்கு முன் இதைச் சீனத்தத்துவ ஞானி கண்டெடுத்தார். இது பின் பிலிபைன்ஸ் தீவிற்கு கொண்டு சொல்லப்பட்டது. பின்னர் காணாமல் போனதாக தெரிவிக்கப்பட்டது பின் 20ம் நூற்றாண்டில் கண்டெடுக்கப்பட்டது.



# முத்தா நீ சொல்க முடிபு

விற்படுக்கையில் பீஷ்மனானவன் விட்டுவைத்திட்ட வீர
மொத்தமும்
கற்படுக்கையாய் ஆகி எம்நிலக் காணிகள் அடிகிடந்தன
கற்படுக்கையும்தாண்டிஎங்களின்கரவலிமையாற்தோண்டியே
நற்படுக்கைபோல் நல்ல ஊற்றுநீர் நாலுநாளிலே கண்டனம்
முட்படுக்கைகள்முனைப்பெடுத்ததோர்மூன்று ஏக்கர்தரிசிலும்
பொற்படுக்கைபோல் பொலிந்ததானியம் பூத்திடும் திறம்
யாத்தனம்

(வேறு)

மண்படுக்கையின் மார்பு குடித்தொரு
மரப்படுக்கையாய் ஆகிய பச்சிலை
விண்படுக்கையில் ஏறிய தென்றலால்
வியப்படைந்துமே சல சலக்கையில்
கண்படுவதைக் காத்திடல் போற்பல
கருங்கனிகளும் மரத்திடை தொங்குமே

அன்று கண்ணகி அறுத்த மார்பது
ஆயிரம் பல ஆண்டுகள் ஆயினும்
இன்றும் எங்களின் மாக்களிற் கனிகளாய்
இனித்திடும் கதை இனியும் தொடருமோ

இச்சையோடு இழுத்து அணைத்திட
இரைந்து வந்த தென்றலைக் கண்டதும்
பச்சை ஓலைக் கரத்தினால் மார்பினைப்
பதைபதைத்திடப் பொத்தியே நாணிடும்
உச்சமாக வளரினும் பெண்மையால்
உடல் வளைந்து நின்றிடும் தென்னைகள்
மிச்சமாக இனியும் இருக்குமோ

ஊழிகள் பல தாண்டியும் மன
ஓர்மமென்ற ஓர் தோணியால்
ஆழிகள் பல தாண்டும் எங்கள்போல்
ஆன எம்நிலப் பனைகளை
தாழிகள் மேல் அரண்களாக்கிடத்
தறித்திடில் மனம் தாங்குமோ

(வேறு)

கப்பூது வெளியில் காதுமடல்
உரசும்
வத்தாவித் தென்னைகளின்
வாவென்ற கையசைப்பும்
எப்போதும் நோய்களுக்கு
எமனாய் ஆகிவிடும்
வேப்பமரக் காற்றின் விஷேஷங்களும்
எப்போதோ போச்சு

ஆத்தாவே எங்களை நீ அகதியாக்கி வைத்த பழி
பார்த்தாயா நீயும் இப்போது படுகின்றாய் உன்
பசிய வேம்புகள் பாறும் அவலத்தை

அன்று நாம்
அரசுக்கு முறையிட்டோம்
நீயும்
முறையிடு
அரச (மரத்திற்கு)
கன்றின் கழுத்தா?
கழுநீர்ப் பானையதா?
என்ற கதைதான்
எங்கள் மரங்களுக்கும்
நன்று! நன்று! தீர்வுக்கு
(மாதன) முத்தாதான் வரவேண்டும்

ச. முகுந்தன்

□ □ □

## குறட்டை

நாம் நித்திரை செய்கின்ற போது, நாக்கின் அடிப் பகுதியையும் அதை அடுத்துக் காணப்படுகின்ற மிருதுவான பகுதிகளையும் கட்டுப்படுத்தும் தசைகள் ஓய்வு பெறுகின்றன. அப்போதும் மூச்சு விடவேண்டி உள்ளது. பக்கங்களில் இருந்து வருகின்ற அந்தக் காற்றால் தசைகள் அசைய ஆரம்பிக்கின்றன. அப்போது எழும் ஒலியே குறட்டை ஆகும்.

□ □ □

## அறிவியல்.................

1) தண்ணீரில் இருந்து பெறப்படும் உலோகம் மக்னீசியம்.
2) காற்றில் இருந்து பெறப்படும் உரம் அமோனியம் நைத்திரைட்.
3) உயிரைக்காக்கும் உலோகம் எனப்படுவது இரேடியம்.
4) காந்தசக்தி கொண்ட உலோகங்கள் இரும்பு, நிக்கல், கோபோல்ட்.
5) வைரத்தின் பிறப்பிடம் நிலக்கரி.
6) '' கொள்ளிவால்பேய்'' எனப்படுவது மெதேன் வாயு
7) முப்போசணைமூலகம் எனப்படுவது N. P. K.

# உங்கள் உடம்பை அறிந்து கொள்ளுங்கள்

அரசன் இருக்க வேண்டியது எங்கே? எங்கள் வர்க்கத்தைப் பார்க்கும் போது நான் அவர்களுக்கு அரசன். அவர்கள் எல்லோரும் சேவை ஆற்றுவது ஆற்றாமல் இருப்பது எனது ஆணைப்படியாகும். அப்போ நான் உங்கள் உடம்பின் அதி உயர்ந்த இடத்தில் இருந்து எனது நிர்வாகத்தை நடத்தவா?

நான் யார் என்பதை நீங்கள் இன்னும் அறிய முடியவில்லையா? அறிய முடியாவிட்டால் சொல்கிறேன் நீங்கள் ஆசைப்படும் பிட்யூட்டறி சுரப்பி ஆவேன். (கபச்சுரப்பி) நான் இரண்டுபகுதியாக இருப்பேன். எனது இருப்பிடச் சுற்றளவு 1 சென்ரி மீட்டர் ஆகும்.

முன்பு கூறியது போல் எனது செயல்பாடுகளுக்குச் சொந்தமானது எனது பிற்பகுதியை விட முற்பகுதியாகும். எனது முற்பகுதியில் 7வகை ஹோமோன்கள் உண்டாக்கப்படுகின்றது. என்னை 3 பகுதிகளாகப் பிரிக்கலாம் முன்பகுதி, நடுப்பகுதி, பிற்பகுதி எனப்படும். இந்த ஹோமோன்களில் இரண்டு வகை நேரடியாக உடலில் உண்டாக்கப்படுகின்றது. அவை வேறு ஹோமோன்களை உண்டாக்குகிறது. அவை ''ரொபிக்'' ஹோர்மோன்கள் எனப்படும்.

## சிரசிலிருந்து அரசாளும் சிறு குமாரன்

நான் தயாரிக்கும் ஹோர்மோன்களும் அவைகளால் ஏற்படும் நலன்களும் உங்களுக்குத் தர விரும்புகின்றேன்.

குறோத் ஹோர்மோன் என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் ஹோர்மோன்கள் உடம்பின் செயலாற்றலுக்கு மிகவும் உதவியாக உள்ளது நான் உற்பத்தி செய்யும் ஹோர்மோன்கள் குறைந்தால் நீங்கள் உயரமாக வளர முடியாது. குருமிட்டோ போலல்லாமல் நன்றாக வளர உதவி செய்வது இந்த ஹோமோன்களாகும்.

எனது அடுத்த உற்பத்தியானது ''அட் விறுக்க பேஷி'' (ACTH) ஹோமோனாகும். இவை மாவும், சீனியும் சேர்ந்த உணவு இவர்களுக்குத் தேவை அவ்வப்போது வேலைகள் செய்வதற்கு தேவையான சக்தியை உடலுக்கு அளிப்பது இந்த உணவுகளே. அரிசி, சோளம், குரக்கன் போன்ற வகைகளும் சீனி, குளுக்கோஸ் போன்ற இனிப்பு வகைகளும் வற்றாளை, மரவள்ளி போன்ற கிழங்கு வகைகளும் பலாக்காய், வாழைப்பழம் சர்க்கரைகளும் மாப்பொருளைத் தருகின்றன. இவை சக்திதரும் உணவுகளாகும். இவை கலங்களுக்கு அட்றீனல் ஹோமோன் உற்பத்தியாக அவசியமாகிறது.

மெலனோசயிட்டு உத்தேயாக என்னும் ஹோமோன் (M. S. H) உங்கள் எல்லோரிற்கும்உண்டாகும் மெலனினை வெளியேற்றச் செய்யும் இந்த மெலன் கறுப்பு நிறத்துக்கான காரணியாகும்.

பெண்களுக்கும், ஆண்களுக்கும் பால் உறவுக்கு உதவும் ஈஸ்ரஜினும் தெஸ்டஸ்ரறோனும் என்னால் உண்டாக்கப்படுகிறது. இவைகளைத் தேவைக்கேற்பத் தயாரிப்பது எனது வேலையாகும்.

**-துசித மலலசேகரா-**

எனது பிற்பகுதியில் உருவாக்கப்படும் ஒக்சிரோசின் எனப்படும் ஹோமோன் பிரசவ நேரத்தில் கருப்பையைச் சுருங்கச் செய்து குழந்தையை வெளியேற்ற உதவும். இன்னும் அன்ரிடையூறற்றிக் ஹோமோன் (ADH) சிறுநீர் வெளியேற்றத்தைக் குறைக்கும். முன்பகுதியில் தைரொயிட்ஹோமோன்கள் சுரக்கப்படும். இது குறைந்தால் பிள்ளைகள் வளர்ச்சி குறைந்து சோம்பலுடன் தடித்த குரலுடனும் காணப்படுவார்கள்.

மூளையில் ஒட்டியிருக்கும் ஒரு சிறுவனாக இருந்தாலும் உங்கள் சீவனத்திற்குச் செய்யும் அவ்வளவு சிறிய வேலை அல்ல என்பதை நீங்கள் ஏற்றுக்கொண்டால் போதும்.

—வணக்கம்—

நான்உங்கள் பிட்யூட்டறி சுரப்பி.

---

தேடுதல் முடிவுற்றது.
தேடுவோர் திருப்திப்படுவதில்லை.
என்ற தலைப்பிலே
இ. இரவீந்திரநாதன் (Bsc- Dip-in Ed.)
அவர்கள்
எமது அடுத்த இதழில் எழுதுகின்றார்.
உயர்தர விஞ்ஞான மாணவர்களுக்கு
பயனுள்ளதாக அமையும்.

### ★ இரவில்

''பிராக்மௌத்'' என்ற வகைப்பறவை பகலில் தன்னை மறந்து நன்றாகத் தூங்குகிறது. அதனை நாம் தூக்கிச் சென்றாலும் விழித்துக் கொள்வதில்லை. ஆனால் அது இரவிலே நன்றாகச் சஞ்சரிக்கும்.

### ★ விட்டின்

காற்று சிறுகுழாய் மூலம் வெளியேறுவதால் உண்டாகும் உந்துதலைக் கொண்டு இயங்கும் ''ஜெட்'' எந்திரத்தைக் கண்டுபிடித்த ஆங்கிலர் (1907)